வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු





Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 30.01.2025 வியாழக்கிழமை | இதழ் : 30 | பக்கங்கள் : 12

# தமிழரசுவின் மூத்த தலைவர் மாவை நேற்றிரவு மறைந்தார்!



## தமிழர் அரசியலில் மிகப்பெரும் ஆளுமை அவர்



யாழ்ப்பாணம், ஜனவரி 30

இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்றிரவு யாழ். போதனா வைத்தியசாலையில் காலமானார். இறக்கும்போது அவருக்கு வயது 82.

இலங்கைத் தமிழர் அரசியலில் மிகப்பெரும் ஆளுமையான மாவையின் இறப்பு தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாவையின் இறப்பை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் தங்கமுத்து சத்தியமூர்த்தி நேற்றிரவு உறுதிப்படுத்தினார்.

வீட்டுக் குளியலறையில் தடக்கி விழுந்தமையால் தலையில் உள்ள நரம்பு ஒன்று பாதிக்கப்பட்ட நிலையில் மாவை சேனாதிராசா யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

தலையில் நரம்பு வெடிப்பு ஏற்பட்டதால் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை அவர் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவருக்கு மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவு காரணமாக 11

## ஜனாதிபதியின் யாழ்.வருகையின்போது போராட்டம் நடத்தத் தடை கோரி வழக்கு!

### யாழ்ப்பாணப் பொலிஸாரால் தாக்கல்

யாழ்ப்பாணம், ஜன. 30

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் யாழ்ப்பாண வருகையின் போது போராட்டம் நடத்துவதற்கு தடை விதிக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பொதுமக்கள் சந்திப்பு என சில நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக நாளை ஜனாதிபதி யாழிற்கு வருகை தர உள்ளார்.

ஜனாதிபதியின் வருகையின்போது போராட்டம் நடத்துவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், வடக்கு மாகாண வேலையில்லாப் பட்டதாரிகள் சங்கம் உள்ளிட்டவை அழைப்பு விடுத்திருந்தன. இந்நிலையில் போராட்டம் நடத்துவதை 11

## லாப்ஸ் எரிவாயு விலை குறையும்

கொழும்பு, ஜன. 30

உலக சந்தையில் எரிவாயு விலையில் ஏற்ற இறக்கம் காணப்பட்ட போதிலும், பெப்ரவரி மாதத்தில் மக்களுக்கு குறைந்த விலையில் எரிவாயுவை வழங்குவதற்கு தாங்கள் செயற்பட்டு வருவதாக லாப்ஸ் எரிவாயு நிறுவனத்தின் 11



## அநுராதபுரம் பொலிஸாரினால் அர்ச்சுனா எம்.பி. யாழில் கைது!

யாழ்ப்பாணம், ஜன. 30

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா நேற்று மாலை அநுராதபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். 11

## வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 30

வடக்கு மாகாண வேலையற்றபட்டதாரிகள் சங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக அமைந்துள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபியின் முன்றலில் கூடிய பட்டதாரிகள், தமிழ்த் தாய் வாழ்த்துடன், 11



## யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் பரிந்துரைகளை நிறைவேற்ற அங்கீகாரம்!

### துணைவேந்தர் சிறி சற்குணராசா தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கம் முன்வைத்த பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு உபவேந்தர் எடுத்த தீர்மானத்துக்கு பல்கலைக்கழக பேரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

அந்த பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிறி சற்குணராசா இதனைத் தெரிவித்தார்.

இந்தநிலையில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் தொடர்பில் நேற்று பல்கலைக்கழக விசேட 11

## யோஷித ராஜபக்ஷவிடம் 7 துப்பாக்கிகள் கைப்பற்றல்!

கொழும்பு, ஜன. 30

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷவிடம் இருந்த ஒன்பது துப்பாக்கிகளில் ஏழு துப்பாக்கிகளைப் பாதுகாப்பு அமைச்சு கையகப்படுத்தியுள்ளதாக பாதுகாப்புச் 11

## கிளிநொச்சி பெரியகுளத்தில் மூழ்கிய குடும்பஸ்தர் மரணம்! 11

தமிழக மீனவர் வாழ்வாதாரத்தை உறுதி செய்து

## யாழ்ப்பாண மீனவருக்கு எந்த பாதிப்புமில்லாது தீர்வு!

### மீனவர் பிரச்னை தொடர்பில் தமிழ்நாடு காங்கிரஸ் யோசனை

சென்னை, ஜன. 30

இந்தியப் பிரதமர் மோடி இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தத்தை போடவேண்டும். அந்த ஒப்பந்தத்தின் மூலமே தமிழக மீனவர்களின் வாழ்வாதார பிரச்னையை தீர்க்க முடியும். இத்தகைய ஒப்பந்தத்தினால் யாழ்ப்பாண தமிழ் மீனவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்ற உறுதியை இந்திய அரசு தர வேண்டும். அந்த வகையில் பிரதமர் மோடி நடவடிக்கை எடுப்பதன் மூலமே தமிழக மீனவர்களின் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண முடியும்" என்று தமிழ்நாடு காங்கி ரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூட்டில் 2 இந்திய மீனவர்கள் காயம் இந்திய வெளிவிவகார அமைச்சு கடும் எதிர்ப்பு!

புதுடில்லி, ஜன. 30

இலங்கை கடற்பரப்பில் வைத்து 13 இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு இந்திய வெளிவிவகார அமைச்சு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுடில்லியில் உள்ள பதில் இலங்கை தூதுவரை அழைத்து கடுமையான எதிர்ப்பை வெளியிட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் கொழும்பில் உள்ள இந்திய தூதரகமும் இந்த விடயம் தொடர்பில் இலங்கை வெளிவிவகார அமைச்சிடம் கேள்வி எழுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வாழ்வாதாரக் கவலைகளைக் கருத்திற்கொண்டு கடற்றொழிலாளர்கள் பிரச்னையை மனிதாபிமான ரீதியாக கையாள வேண்டும் என இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாகவும், எந்த சந்தர்ப்பத்திலும் பலத்தைப் பயன்படுத்துவது ஏற்றுக்கொள்ளத் தக்க விடயமல்ல எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களுக்கு இடையேயான புரிதல் கண்டிப்பான பின்பற்றப்படவேண்டும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

(அ)



# வடக்கு முதலீட்டாளர்களை சந்தித்த பிரிட்டனின் பிராந்திய அமைச்சர்!

யாழ்ப்பாணம், ஜன. 30

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும், பிரிட்டனின் இந்தோ - பசுபிக் பிராந்திய அமைச்சர் கத்தரின் வெஸ்ட், இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் அன்ரூ பட்ரிக்ஸ் ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு யாழ்ப்பாணம் பொதுநூலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது

யாழ்ப்பாணம் பொதுநூலகத்தைப் பார்வையிட்ட பின்னர் அங்குள்ள கேட்போர் கூடத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றதுடன் இதில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் சங்கப் பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர்

இதில் முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# கண்ணகிபுரத்தில் குளவிகொட்டுக்கு இலக்காகி 9 மாணவர் உட்பட 15 பேர் வைத்தியசாலையில்!

கிளிநொச்சி, ஜன. 30

கிளிநொச்சி கண்ணகிபுரம் பகுதியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான பாடசாலை மாணவர்கள் 9 பேர் உள்ளிட்ட 15 பேர், கிளிநொச்சி தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீதியிலிருந்த குளவிக்கூடு கலைந்ததில் வீதியால் சென்றவர்களைக் குளவி கொட்டியுள்ளது.

குளவிக்கொட்டுக்கு இலக்கான பாடசாலை மாணவர்கள் கண்ணகிநகர் அம்பிகை வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ)

# வசந்த கரன்னகொடவின் மனுவை விசாரிப்பதிலிருந்து விலகிய நீதிபதி

கொழும்பு, ஜன. 30

கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதியில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தி காணாமற்போன சம்பவம் தொடர்பாக முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையை நிறுத்தி வைக்க உத்தரவிடக் கோரி வசந்த கரன்னகொட தாக்கல் செய்த ரிட் மனுவை விசாரிக்கும் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வில் நீதிபதி அமல் ரணராஜா குறித்த வழக்கில் இருந்து நேற்று முன்தினம் விலகினார்.



இதனையடுத்து இந்த வழக்கு புதிய நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

வசந்த கரன்னகொட தாக்கல் செய்திருந்த மனுவின் நீதிபதிகளான மாயாதுன்னே கொரயா, பி. குமரன் ரத்தினம், சஷி மகேந்திரன், தமித் தோட்டவத்தே மற்றும் அமல் ரணராஜா ஆகியோர் அடங்கிய அமர்வுக்கு முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், குறித்த வழக்கின் விசாரணையில் இருந்து விலகுவதாக, நீதிபதி அமல் ரணராஜா தெரிவித்தார். இந்த வழக்கு தொடர்பாக நீதிபதி அமல் ரணராஜா முன்னர் பல உத்தரவுகளை பிறப்பித்துள்ளதாகவும், எனவே இந்த வழக்கின் விசாரணையிலிருந்து அவர் விலகுவதாகவும் நீதிபதிகள் குழாமின் தலைவர் நீதிபதி மாயாதுன்னே கொரயா தெரிவித்தார்.

(அ)

# ஆணைக்குழுவின் அனுமதியற்ற கைபேசிகளை வாங்கவேண்டாம்

## தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 30

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனுமதி இல்லாத கையடக்க தொலைபேசிகளை கண்காணித்து, பயன்படுத்துவதைத் தடுக்க புதிய மென்பொருள் அறிமுகப்படுத்தப்படும் என அந்த ஆணைக்குழு அறிவித்துள்ளது.

எதிர்காலத்தில், தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அனுமதி இல்லாமல் எந்தவொரு கையடக்க தொலைபேசிகளையும் வாங்கவேண்டாம் எனப் பொது மக்களிடம் கோரப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் பந்துல ஹேரத் இடு தொடர்பில் கூறியதாவது -

எமது நிறுவனத்தால் அங்கீகரிக்கப்படாத எந்தவொரு கையடக்க தொலைபேசிகளையும் வாங்க வேண்டாம் என்று பொதுமக்களை தயவுசெய்து கேட்டுக்கொள்கிறோம்.

இதுபோன்ற அங்கீகரிக்கப்படாத தொலைபேசிகளை தடுக்க விரைவில் ஒரு தானியங்கி அமைப்பைச் செயல்படுத்துவோம்.

அங்கீகாரம் இல்லாத தொலைபேசிகளால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள சட்டவிரோத செயல்களைத் தடுப்பது மற்றும் நாட்டில் கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்துபவர்களைப் பாதுகாப்பது இதன் நோக்கமாகும் - என்றார்.

(அ)

# யாழில் தேவார பண்ணிசை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.30

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணப் பிரதேச செயலகம், சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலகங்கள், இலங்கை தேவாரப் பண்ணிசை வளர்ச்சிக் கழகம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள தேவாரப் பண்ணிசை நிகழ்வு எதிர்வரும் 03 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 04.00 மணிக்கு சண்டிலிப்பாய் மத்திய கலாசார நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இந்தியா, தமிழ்நாடு அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர் திருமுறைக் கலாநிதி முனைவர் குமாரவயலூர் திருஞான பாலச்சந்திர ஓதுவார் மற்றும் தேவார இசைக்கலைமாணிகள் சீர்காழியூர் சகோதரிகள் இரா. அகிலா, இரா. அருணா குழுவினர்கள் வளவாளர்களாகப் பங்குகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு பயனடையும் வண்ணம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் யா. அநிருத்தனன் தெரிவித்துள்ளார்.

(எ)

# யாழ். இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 1 மணியளவில் கல்லூரி முதல்வர் இரட்ணம் செந்தில்மாறன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கல்லூரியின் பழைய மாணவரும் நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலை எலும்பியல் சத்திர சிகிச்சை நிபுணருமான வைத்திய கலாநிதி கனகரட்ணம் காண்டீபன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

# பெருந்தொகை சங்குகளுடன் தலைமன்னாரில் ஒருவர் கைது

மன்னார், ஜன.30

தலைமன்னார், பேசாலை பகுதியில் சட்டவிரோதமாக பிடிக்கப்பட்ட சங்குகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 3,492 சங்குகள் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.(எ)

# வைத்தியசாலை ஊழியரின் மோட்டார் சைக்கிள் திருட்டு

## சம்பவ நேரம் இயங்காதிருந்த கண்காணிப்புக் கமரா

கிளிநொச்சி, ஜன. 30

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பெண் பரிசோதகர் ஒருவரின் நான்கு

இலட்சத்திற்கு மேற்பட்ட பெறுமதியான டியோ மோட்டார் சைக்கிள் வைத்தியசாலை

தரிப்பிடத்திலிருந்து கடந்த 26 ஆம் திகதி திருடப்பட்டுள்ளது.

குறித்த தினம் மாலை வைத்தியசாலையிலிருந்து குறித்த பெண் பரிசோதகரை தொடர்பு கொண்ட வைத்தியசாலை நிர்வாகம் கடமைக்கு ஊழியர் இன்மையால் அன்றைய தினம் சமூகமளித்து கடமையாற்றுமாறு கேட்டுக்கொண்டமைக்கு அமைவாக மாலை 6.30 மணிக்கு கடமைக்குச் சென்று ஊழியர் மோட்டார் சைக்கிள் திறப்பை மறந்து அதிலேயே விட்டுச் சென்றுள்ளார். பின்னர் இரவு 10.30 மணியளவில் மோட்டார் சைக்கிள் திறப்பை காணவில்லை என வாகனத் தரிப்பிடத்திற்குச் சென்று மோட்டார் சைக்கிளைத் தேடியபோது அது காணாமல் போயிருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதோடு. வைத்தியசாலையில்

பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமெராக்களை பரிசோதித்த போது குறித்த

கமெராக்கள் அன்றைய தினம் மாத்திரம் இயங்காது இருந்துள்ளமையும்

அவதானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வைத்தியசாலை நிர்வாகத்திடம் பாதிக்கப்பட்ட பெண் ஊழியர்

முறையிட்டபோது வைத்தியசாலையில் மோட்டார் சைக்கிள் களவாடப்பட்ட விடயத்தில் தம்மால் எதுவும் செய்ய முடியாது என கூறிவிட்டதாக பணியாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
30.01.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், தை 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியலிலிருந்து விலகுவதான் வழியென்றால்

புதிய அரசியல் அமைப்பை தமிழ் மக்கள் ஆதரிக்கக் கூடாது - அவ்வாறு ஆதரித்தால் நான் அரசியலிலிருந்து விலகிவிடுவேன் - ஏனென்றால் அதன் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலை நாம் மேற்கொள்வது அர்த்த மற்றது - இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்திருக்கின்றார். இவ்வாறு கூறினால், ஒரு வேளை தன்னில் அனுதாபப்பட்டு தமிழ் மக்கள் புதிய அரசியல் யாப்பை தவிர்ப்பார்கள் என்று அவர் எண்ணுகின்றாரா? இன்றைய சூழலில் இவ்வாறானதொரு கருத்தை அவர் எதற்காக வெளிப் படுத்துகின்றார்?

ஒரு விடயத்தை எதிர்கொள்ள முடியாமல் போகும் போது அரசியலிலிருந்து விலகி ஓடுவதுதான் தீர்வு என்றால், பொன்னம்பலம் மட்டுமல்ல இன்றுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் எப்போதோ அரசியலைவிட்டு ஒதுங்கியிருக்க வேண்டும். ஏனெனில் யுத்தம் முடிவுற்று பதினைந்து வருடங்கள் கடந்துவிட்ட பின்னரும் கூட, ஒரு சிறு விடயத்தைக் கூட, தமிழ் மக்களின் பெயரால் அடைய முடியவில்லை. இந்த நிலையில் தமிழ்த் தேசிய அரசியலை முன்வைக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களுமே அரசியலுக்கு தலைமை தாங்கத் தகுதியற்றவர்களாகவே இருக்கின்றனர்.

முதலாவது விடயம் அவ்வாறானதோர் அரசியல் யாப்பு வருமா என்பது - அவ்வாறானதொரு யாப்பு வருவதற்கான வாய்ப்பு மிகவும் குறைவான ஒன்றாகும் - ஏனெனில் அரசாங்கம் காலம் தாமதித்து முயற்சித்தால் பல்வேறு புதிய சவால்களை எதிர்கொள்ள நேரிடும். ஒரு வேளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அவ்வாறானதொரு யாப்பை கொண்டுவர முற்பட்டால் - தமிழ் அரசியல் கட்சிகள் மீது தமிழ் மக்கள் உண்மையிலேயே நம்பிக்கை கொண்டிருந்தால், அவர்கள் அதனை ஆதரிக்கமாட்டார்கள் - ஆனால் இங்கு பிரச்னை தமிழ் மக்களை அரசியல் அமைப்பை ஆதரிக்கக் கூடாது என்று கூறும் பொன்னம்பலம், தமிழ் மக்கள் ஆதரித்து விடுவார் என்னும் அச்சத்திலேயே இவ்வாறானதொரு கருத்தை முன்வைக்கின்றார். ஆனால், மக்கள் மத்தியில் அவ்வாறான அவநம்பிக்கை ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதைப் பற்றியல்லவா முதலில் சிந்திக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் மக்கள் மத்தியில் நம்பிக்கையை பெற்றிருக்குமாக இருந்தால், குறிப்பாக வடக்கு மாகாண மக்கள் தேசிய மக்கள் சக்தியை நோக்கி பெரும்பான்மையாக வாக்களித்திருக்கமாட்டார்கள். இத்தனை கட்சிகள் - அதிலும் தாங்களே இருப்பத்திநாலு கரட் தேசியவாதிகள் என்று மக்களை நம்பவைப்பதற்காக இரவு பகலாக முயற்சிக்கும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு தெரிவாக இருந்த போதிலும் கூட, தமிழ் மக்கள் எதற்காக தேசிய மக்கள் சக்தியை தெரிவு செய்தனர். அநுர அலையின் பக்கமாக ஏன் அள்ளுண்டனர்?

தமிழ்த் தேசிய அரசியல் பலமான ஒன்றாக இருந்திருந்தால் வடக்கு மக்கள் அவ்வாறான முடிவை எடுத்திருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காதல்லவா. தமிழ்த் தேசியத்தை பிரதிநித்துவம் செய்வதாக கூறிக் கொள்ளும் அனைவருமே தங்களின் பதவி நிலைகளுக்காக சண்டையிடும் சாமான்ய அரசியல்வாதிகளாகவே இருக்கின்றனர். தங்களின் நலன்களை முன்னிறுத்தியே சிந்திக்கின்றனர். இந்த நிலையில் மக்களும் தங்களது அன்றாட நலன்களை, தங்களின் பிள்ளைகளின் எதிர் காலத்தை கருத்தில் கொண்டு முடிவெடுக்க முற்பட்டால் அதனை எவ்வாறு தவறு என்று கூறமுடியும்?

முதலில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையளிக்கக் கூடிய அரசியல் தலைமைத்துவத்தை வழங்க முடியாமல் போனதற்கான காரணங்களை ஆராய்வதே தமிழ் கட்சிகள் செய்ய வேண்டியது. அதைவிடுத்து, நீங்கள் ஆதரித்தால், நாங்கள் அரசியலிலிருந்து விலகிவிடுவோம் என்று கூறுவதானது, அரசியல் இயலாமையின் வெளிப்பாடாகும்.




# சிலம்பம், கராத்தேயில் சாதித்த வடக்கு மாணவர்கள் கௌரவிப்பு

*யாழ்ப்பாணம், ஜன.30*

இந்தியாவின் மதுரையில் நடைபெற்ற சிலம்பம் மற்றும் கராத்தே போட்டிகளில் 36 முதலிடங்களைப் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றைய தினம் காலை மானிப்பாய் அன்னை மரியாள் ஆலயத்துக்கு முன்பு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் சுபாஜினி மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து சிவலீமன் சிலம்ப கழக மாணவர்களும் பாபு இஷின் ரியூ கராத்தே பாடசாலை மாணவர்கள் உள்ளடங்கிய 20 பேர் கொண்ட குழுவினர் மதுரையில் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான கராத்தே மற்றும் சிலம்பம் போட்டியில் பங்குபற்றினர்.

போட்டியில் பங்கு பற்றி 36 முதல் பரிசுகளையும், 08 இரண்டாவது பரிசுகளையும், 05 மூன்றாவது பரிசுகளையும் பெற்றதோடு 95 கேடயங்களை தம் வசமாக்கினர்.

இந்த நிலையில் குறித்த போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்த நிலையில் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர். (எ)

# 40, 000 போதை மாத்திரைகளுடன் ஐந்து இளைஞர்கள் நேற்றுக் கைது

## யாழ். போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிரடி

*யாழ்ப்பாணம், ஜன.30*

40 ஆயிரம் போதை மாத்திரைகளுடன் ஐந்து இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் இயங்கும் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவின் தகவலின் அடிப்படையில் யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவுடன் இணைந்து நடத்திய சுற்றிவளைப்பில் பரந்தன் பகுதியில் வைத்து ஒருவரும் முழங்காவில் பகுதியில் வைத்து நால்வரும் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்திய பின்னர் நீதிமன்றத்தில் முற்



படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# நடத்துநரின் அநாகரிகமான செயல்

## பயணிகள் கடும் விசனம்

*கிளிநொச்சி, ஜன.30*


தனியார் பஸ் ஒன்றில் அளவுக்கதிகமாக பயணி களை ஏற்றியதுடன் மேலும் பயணிகளை ஏற்றுவதற்காக நடத்துநர் அநாகரிகமான முறையில் இருக்கைகளுக்கு மேல் ஏறி பயணிகளை மேலும் நெருங்கி நிற்குமாறு கோரிய சம்பவம் பயணிகள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிளிநொச்சிக்கும் முகமாலை பகுதிக்கும் இடை யில் கடந்த 27ஆம் திகதி குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இந்த நிலையில் குறித்த பஸ் இருக்கைகளுக்கு மேல் ஏறிய நடத்துநரின் வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. (எ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் ஆதாய முண்டு. சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்பு களை ஒப்படைப்பார்கள். மாற்றம் ஏற்படும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். தடைப்பட்ட வேலைகளை விரைந்து முடிப்பீர்கள். உறவினர்கள் மதிப்பார்கள். பண வரவு திருப்தி தரும். அதிர்ஷ்டம் நிறைந்த நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் செலவுகளை குறைக்க முடியாமல் திணறுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக் கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள். பொறுமை தேவைப்படும் நாள்.

**கடகம்**
பிள்ளைகள் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். கல்யாண பேச்சு சாதகமாக முடியும். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

**சிம்மம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண் பர்களின் வருகை யால் வீட்டில் உற்சாகம் பொங் கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆத ரவு பெருகும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. நயமாகப் பேசுபவர் களை நம்பாதீர்கள். கனவு நனவாகும் நாள்.

**துலாம்**
பணப்பற்றாக்குறையை சாமர்த்தியமாக சமா ளிப்பீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியா பாரத்தில் உழைப்பால்உயரும் நாள்.

**விருச்சிகம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன் பிறந்தவர்கள் பாசமழை பொழிவார்கள். அர சால் ஆதாயம் உண்டு. அதிகாரப் பதவியில் இருப்ப வர்கள் உதவுவார்கள். தைரியம் கூடும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்த சோர்வு நீங்கி துடிப்புடன் செயல் படத் தொடங்குவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பம் நீங்கும். அரை குறையாக இருந்த வேலைகள் முடியும். மகிழ்ச்சியான நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்க வேண்டி வரும். பொறுப்புணர்ந்து செயல் பட வேண்டிய நாள்.

**கும்பம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப் பீர்கள். உறவினர்களுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். அரசு காரியங்கள் தாமதமாக முடியும். தடை களை தாண்டி முன்னேறும் நாள்.

**மீனம்**
பெற்றோருடன் மனம் விட்டு பேசுவீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். எதையும் சமாளிக் கும் சாமர்த்தியம் பிறக்கும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். மதிப்புக் கூடும் நாள்.

# இந்திய மீனவர் எல்லை தாண்டுவதே அனர்த்தங்களுக்கு வழிவகுக்கிறது

## அமைச்சர் சந்திரசேகர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம்,ஜன.30

இந்திய மீனவர்கள் தமது கடற்பரப்பை தாண்டி இலங் கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி உள் நுழைவது அனர்த்தங் களுக்கு வழிவகுப்பதாக கடற் றொழில் அமைச்சர் இராம லிங்கம் சந்திரசேகர் தெரிவித் தார்.

வடமராட்சி கடற்பரப்புக் குள் அத்துமீறி நுழைந்த இந் திய மீனவர்கள் மீது கடற்படை யினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், "இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடு பட்டு எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழித்து வரு கின்றனர்.

இந்த நிலையில் இலங்கைக் குள் அத்துமீறி நுழைந்த மீன வர்களை கைது செய்வதற்காக கடற்படையினர் சுற்றி வளைத்து அவர்களின் படகில் ஏறியுள்ளனர்.

இவ்வாறு ஏறிய கடற் படையினரை படகுடன் இழுத் துச் செல்வதற்கு இந்திய மீன வர்கள் தயாரானபோது கடற் படையினர் தடுத்து நிறுத்துவ தற்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

மீனவர்கள் விவகாரம் இன்று நேற்று உருவானது அல்ல. பல வருடங்களாக நீடித்து வரும் பிரச்னை.

இந்த பிரச்னைக்கு எமது ஆட்சியில் தீர்வை காண்போம் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனெனில் மக்களை தொடர்ச் சியாக கண்ணீர் விட வைக்க முடியாது.

நாங்கள் பலமுறை இந்திய மீனவர்களை தயவாகக் கேட் டுள்ளோம். அத்துமீறி இலங்கை கடல் எல்லைக்குள் மீன்பிடியில் ஈடுபடாதீர்கள், எமது மீனவ மக்களின் வாழ்வா தாரத்தை அழிக்காதீர்கள் என்று.

எமது மீனவ மக்களை இந் திய மீனவர்கள் துன்பப்படுத்து வதை எக் காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது"- என் றார். (எ-05)

# அளவீட்டு அலகுகள் திணைக்களத்தால் கிளிநொச்சியில் சோதனை நடவடிக்கை

கிளிநொச்சி, ஜன.30

அளவீட்டு அலகுகள் திணைக்களத்தால் நேற்று முன் தினம் கிளிநொச்சி, வட்டக்கச்சி சந்தைப்பகுதி மற்றும் பரந்தன், கண்டாவளை போன்ற பகுதி களில் சோதனை நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, உரிய காலத்தில் முத்திரையிடப் படாத மற்றும் அரச அனுமதி யற்ற தராசுகள் திணைக்களத்தி னரால் பறிமுதல் செய்யப்பட் டன.

மேலும், நெல் கொள்வ னவின் போது அரச அனுமதி யற்ற தராசைப் பயன்படுத்தி மோசடி செய்தமை கண்டு பிடிக்கப்பட்டதோடு, அள வீட்டு அலகுகள் திணைக்கள அதிகாரிகளால் கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன், அனுமதியற்ற தராசுகள் பறி முதல் செய்யப்பட்டதோடு மோசடியாளர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.(எ)

# நாட்டு நடப்புகளையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.30

புத்தகப் பூச்சிகளாக இருந்தால் எமது அறிவு விருத்தி யடையாது. நாட்டு நடப்புக ளையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். பத்திரிகைகளைப் படிக்க வேண்டும். பாடப் புத்த கங்களுக்கு மேலதிகமாக படிக் கும் ஒவ்வொரு விடயங்களும் எமது அறிவை விருத்தி செய் யும்.

இன்றைய இளைய சமூ கத்தை அதனை நோக்கித் தள்ள வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேத நாயகன் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு நிகழ்வும், 'பச்சிலை' மலர் வெளியீடும், பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில்



நேற்று முன்தினம் பிரதேச சபையின் செயலர் திருமதி த. தர்சினி தலைமையில் நடை பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந் தினராக கலந்து கொண்ட ஆளு நர் உரையாற்றும்போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, 'பச்சிலை' நூலை யும் வெளியிட்டு வைத்தார்.

குறித்த நிகழ்வில் பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர் த. ஜெய சீலன், கிளிநொச்சி உள்ளூ ராட்சி உதவி ஆணை யாளர் ப. சத்தியராகவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (எ)

# மீனவ அமைப்பு பிரதிநிதிகள் ரவிகரன் எம்.பியுடன் சந்திப்பு

முல்லைத்தீவு,ஜன.30

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளரும், உலக மீனவ சம்மேளனத்தின் பொதுச் செயலாளருமான ஹேமன்குமார மற்றும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத் தின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் சிவகுருநாதன் தாஸ், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் பாராளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரனை சந்தித்து கலந்துரையாடினர்.

முல்லைத்தீவு - புதுக்குடி யிருப்பு பகுதியில் அமைந் துள்ள ரவிகரன் எம்.பியின் மக்கள் தொடர்பகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன் போது, வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பிலும், அப்பிரச்னைக ளுக்குத் தீர்வுகாண எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள் வது போன்ற விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையா டப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகளை குறைக்கமுடியாது!

## அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தாமல்

கொழும்பு, ஜன. 30

**முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை குறைக்கும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அரசியலமைப்பின் சில பிரிவுகள் தடையாக உள்ளதாக அரசாங்கம் நிய மித்த குழு தெரிவித்துள்ளது என தகவல் வெளியாகியுள்ளது.**

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் வாக்குறுதியளித்தபடி சிக்கன நடவடிக்கைகளை கடைப்பிடிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை குறைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இது குறித்து ஆராய்வதற்காக அவர் குழுவொன்றை நியமித்திருந்தார்.

இது குறித்து ஆராய்ந்த குழுவினர், அரசமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சில சலுகைகளை குறைக்கமுடியாது என்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

அரசமைப்பின் 36 ஆவது பிரிவில் இது குறித்து சில விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதை அந்த குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசமைப்பின் இந்த பிரிவுகளை மாற்றுவது பல காரணங்களால் அரசாங்கத்துக்கு சவாலான விடயம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் ஜனாதிபதிகளுக்கான உரிமைச் சட்டத்தின்படி, முன்னாள், ஜனாதிபதிகளுக்கு வாடகைகளை வசூலிக்காமல் வீடுகளை வழங்கவேண்டும்.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர், அரசியலமைப்பின்படி முன்னாள் ஜனாதிபதிகளுக்கான ஓய்வூதியம் போன்ற சில சலுகைகளை உடனடியாக இரத்து செய்ய முடியாது என தெரிவித்துள்ளார்.

எனினும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியங்களை கட்டுப்படுத்த முடியும் என அவர் கூறினார். (அ)

## 2024ஆம் ஆண்டுக்கான சாதாரண தர பரீட்சை நேர அட்டவணை வெளியீடு

கொழும்பு, ஜன. 30

2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரணத்தர பரீட்சைக்கான நேர அட்டவணையை பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் மார்ச் 17ஆம் திகதி முதல் மார்ச் 26 வரை பரீட்சைகள் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை அட்டவணையை பரீட்சை திணைக்களத்தின் இணையத்தளத்திற்குப் பிரவேசித்துப் பார்வையிட முடியும் என பரீட்சைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

## சுதந்திர தின நிகழ்வுக்கான ஒத்திகை நேற்று ஆரம்பம்!

கொழும்பு, ஜன. 30

நாட்டின் 77 ஆவது சுதந்திர தின ஒத்திகை நிகழ்வுகள் நேற்று ஆரம்பமாகின. அதற்கமைய நேற்று காலை 8.00 மணியிலிருந்து இந்த ஒத்திகை நிகழ்வுகள் கொழும்பு சுதந்திர சதுக்க வளாகத்தில் இடம்பெற்றன.

தேசிய மறுமலர்ச்சிக்காய் ஒன்றிணைவோம் என்னும் தொனிப்பொருளில் இம்முறை சுதந்திர தின நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந்நிலையில் முப்படை, பொலிஸ் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்பு பிரிவினர், குதிரைப் படையினரின் அணிவகுப்புப் பயிற்சிகள் நேற்று இடம்பெற்றன. இந்த அணிவகுப்பு பயிற்சி நடவடிக்கைகள் எதிர்வரும் 2ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளது.

## ரூபாவின் பெறுமதி மேலும் அதிகரிப்பு!

கொழும்பு, ஜன. 30

நேற்றைய தினத்துடன் ஒப்பிடுகையில், நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 292 ரூபாய் 92 சதம், விற்பனைப் பெறுமதி 301 ரூபாய் 60 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 362 ரூபாய் 95 சதம், விற்பனைப் பெறுமதி 376 ரூபா 80 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 303 ரூபாய் 90 சதம், விற்பனைப் பெறுமதி 316 ரூபாய் 35 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 321 ரூபாய் 71 சதம், விற்பனைப் பெறுமதி 336 ரூபாய் 50 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 202 ரூபா 23 சதம், விற்பனைப் பெறுமதி 210 ரூபாய் 71 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 180 ரூபாய் 66 சதம், விற்பனைப் பெறுமதி 190 ரூபாய் 5 சதம்.

சிங்கப்பூர் டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 215 ரூபாய் 3 சதம், விற்பனைப் பெறுமதி 225 ரூபாய் 11 சதம்.

ஜப்பானிய யென் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 1 ரூபாய் 87 சதம், விற்பனைப் பெறுமதி 1 ரூபாய் 94 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அத்தியாவசிய பொருட்களின் விலை வரம்புகள் வெளியீடு

கொழும்பு, ஜன. 30

பல அத்தியாவசிய பொருட்களின் மொத்த மற்றும் அதிக பட்ச சில்லறை விலை வரம்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி வெள்ளை முட்டை, பால்மா, கோதுமை மா, சீனி, பருப்பு,உருளைக் கிழங்கு உள்ளிட்ட பொருட்களுக்கு மொத்த மற்றும் அதிக பட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, வெள்ளை முட்டையின் விலை 28-35 ரூபாவாகவும், 400 கிராம் பால்மாவின் விலை 870-1,000 ரூபாவாகவும், ஒரு கிலோ கோதுமை மா 155-163 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனி 228-245 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் பருப்பு 275-293 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் இறக்குமதி செய்யப்பட்ட உருளைக்கிழங்கு 160-180 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஒரு கிலோகிராம் வெள்ளை அரிசி 210-220 ரூபாவாகவும், உள்ளூர் அரிசி 220-230 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் அரிசி 210-220 ரூபாவாகவும், நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

## எதிரணியை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் எம்.பிக்கள் சந்தித்து பேச்சு

கொழும்பு, ஜன. 30

வலுவான எதிர்க்கட்சியைக் கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த கட்சித் தலைவர்களின் சந்திப்பொன்று பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் இடம்பெற்றுள்ளது.

பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பலமான எதிர்க்கட்சியை உருவாக்கி, மக்களின் பிரச்னைகளை அரசாங்கத்தின் கவனத்துக்கு கொண்டு வரும் வகையில் அனைவரையும் ஒன்று திரட்டுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சக கட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இதன் மூலம் பலமான பாராளுமன்றத்தை உருவாக்க முடியும் என்றும், அரசாங்கத்தின் சிறந்த விடயங்களுக்கு ஆதரவளிப்பது போலவே, நாட்டுக்கும் மக்களுக்கும் பாதகம் விளைவிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அதற்கு எதிராக மக்கள் பக்கம் நாம் முன் நிற்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு மேலும் சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பில், அனுராத ஜயரத்ன, சாணக்கியன் இராசமாணிக்கம், மனோ கணேசன், பழனி திகாம்பரம், கயந்த கருணாதிலக, ஜே.சி. அலவத்துவல, அஜித் பி. பெரேரா, ரவி கருணாநாயக்க உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

### ஏப்ரல் 21 தாக்குதல் விசாரணை:

## சட்டமா அதிபர் வைத்த கோரிக்கை நிராகரிப்பு!

கொழும்பு, ஜன. 30

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோருக்கு எதிரான வழக்கை விசாரிப்பதற்காக மூவரடங்கிய புதிய நீதிபதிகள் ஆயம் ஒன்றைப் பெயரிடுமாறு பிரதம நீதியரசரிடம் பரிந்துரைக்குமாறு, சட்டமா அதிபர் முன்வைத்த கோரிக்கை, கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆயத்தினால் நிராகரிக்கப்பட்டது.

இந்த வழக்கில் முன்னாள் பாதுகாப்பு செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகிய பிரதிவாதிகளை அழைக்காது அவர்களைக் குற்றமற்றவர்களாக அறிவித்து விடுவிப்பதற்குக் கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆயம் முன்னதாக உத்தரவிட்டது.

பிரதிவாதிகளை அழைக்காமல் குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்து விடுதலை செய்வதற்குக் கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆயம் மேற்கொண்ட தீர்மானம் சட்டத்திற்கு முரணானது என தெரிவித்து அதை வலுவற்றதாக்குமாறு கோரி சட்டமா அதிபரால் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது.

குறித்த மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உயர்நீதிமன்றம், பிரதிவாதிகளை அழைக்காமல் அவர்களைக் குற்றமற்றவர்களாக அறிவித்து விடுவிப்பதற்கு மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆயம் மேற்கொண்ட தீர்மானம் சட்டத்துக்கு புறம்பானது எனவும், குறித்த வழக்கை மீண்டும் அழைத்து, புதிதாக தீர்ப்பை அறிவிக்குமாறும் கொழும்பு மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் ஆயத்துக்கு உத்தரவிட்டது.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, விசாரணைகள் புதிய நீதிபதிகள் ஆயம் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும் என சட்டமா அதிபர் சார்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுதர்ஷன டி சில்வா மற்றும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் ஆகியோர் கோரியிருந்தனர்.

இதற்கு எதிர்ப்பை வெளியிட்ட பிரதிவாதியான பூஜித் ஜயசுந்தர சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி, இவ்வாறான கோரிக்கைகளை முன்வைப்பதற்குச் சட்டத்தில் எந்த சந்தர்ப்பமும் வழங்கப்படவில்லை என சுட்டிக்காட்டினார்.

முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை ஆராய்ந்த மூவரடங்கிய நீதிபதி ஆயம் குறித்த கோரிக்கையை நிராகரித்துள்ளது.

மேலதிக விசாரணைகளுக்காக வழக்கு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

## மின்சார கட்டணத்தின் சலுகை மக்களை சென்றடைகின்றதா?

### ஆராயும் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு

கொழும்பு, ஜன. 30

குறைக்கப்பட்ட மின்சாரக் கட்டணத்தின் சலுகை பொது மக்களை முறையாகச் சென்றடைகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதாக பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை இடம்பெறவுள்ளதாக ஆணைக் குழுவின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜயநாத் ஹேரத் தெரிவித்தார்.

இதில் பங்கேற்குமாறு இலங்கை வணிக சபை, வர்த்தக மற்றும் கைத்தொழில் சபைகளின் கூட்டமைப்பு, இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கம், இலங்கை தேசிய கைத்தொழில் சபை, கட்டுமான தொழில் சபை மற்றும் ஒருங்கிணைந்த ஆடை சங்கங்களின் கூட்டமைப்பு ஆகியவற்றுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த 17ஆம் திகதி நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எதிர்வரும் 6 மாதங்களுக்கு மின்சாரக் கட்டணத்தை 20 சதவீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சிறுவரிடையே சிக்குன்குனியா பாதிப்புக்கள்!

## வைத்தியர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜன. 30

**சமீப நாட்களாக குழந்தைகளிடையே சிக்குன்குனியா பாதிப்புகள் அதிகரித்து வருவதாக லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை நல ஆலோசகர் வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்தார்.**



ஏடிஸ் எஜிப்டி மற்றும் ஏடிஸ் அல்போபிக்டஸ் நுளம்புகளால் இந்த நோய் பரவுகிறது என்று வைத்தியர் பெரேரா எடுத்துரைத்தார். போதுமான ஓய்வு மற்றும் பரிந்துரைக்கப்பட்ட அளவுகளில் பாராசிட்டமோல் முறையாக வழங்குவதன் மூலம் சிக்குன்குனியாவை நிர்வகிக்க முடியும் என்று பெரேரா கூறினார்.

அதிக காய்ச்சல், கடுமையான மூட்டு வலி, தசை வலி மற்றும் மூக்கைச் சுற்றியுள்ள தோல் கருமையாக இருப்பது போன்ற அறிகுறிகள் நோயின் பொதுவான குறிகாட்டிகள் என்று அவர் வலியுறுத்தினார். சிக்குன்குனியா முதன்மையாக பெரியவர்களை பாதிக்கிறது என்றாலும், குழந்தைகளுக்கு பரவும் ஆபத்து குறிப்பிடத்தக்கது.

சிக்குன்குனியாவைத் தவிர, டெங்கு மற்றும் குழந்தை பருவ ஆஸ்துமா போன்ற நோய்களும் குழந்தைகளிடையே பரவலாக இருப்பதாக வைத்தியர் பெரேரா குறிப்பிட்டார். நுளம்பு இனப்பெருக்கத்தைத் தடுக்க சுத்தமான சூழலைப் பராமரிப்பதன் முக்கியத்துவத்தையும், அதன் மூலம் இந்த நோய்கள் பரவுவதைக் குறைப்பதையும் அவர் வலியுறுத்தினார். நுளம்புகளின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், இந்த நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கவும் பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். (அ)

## ஹெரோயினுடன் ஒருவர் சிக்கினார்!

கொழும்பு, ஜன. 30

முல்லேரியா காவல்துறை பிரிவிற்குட்பட்ட உடமுல்ல பகுதியில் நடத்தப்பட்ட சோதனையின் போது ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது குறித்த நபரிடமிருந்து 2 கிலோ 218 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலும், சந்தேக நபரிடமிருந்து 667,000 ரூபாய் பணம், 3 கையடக்க தொலைபேசிகள் மற்றும் போதைப்பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு மகிழுந்து ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் முல்லேரியா பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நாமலுக்கு எதிராக குற்றப் பத்திரிகை!

கொழும்பு, ஜன. 30

பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் குறித்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

இலங்கையில் ரக்பி அபிவிருத்திக்காக இந்திய கிரிஷ் எனப்படும் இந்திய நிறுவனத்தால் வழங்கப்பட்ட 70 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத் தொடர்பில் இந்த குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (அ)

## சுதந்திர தினத்துக்காக கொழும்பில் விசேட போக்குவரத்து நடைமுறை

கொழும்பு, ஜன. 30

இலங்கையின் 77ஆவது தேசிய சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கான ஒத்திகைகள் காரணமாக சுதந்திர சதுக்கத்தை அண்மித்த பகுதிகளில் நேற்று முதல் விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

குறித்த பகுதியில் நேற்று முதல் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரை காலை 8.மணி முதல் நண்பகல் 12 மணி வரை விசேட போக்குவரத்துத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, கறுவாத்தோட்டம் - விஜேராம மாவத்தையிலிருந்து வித்யா மாவத்தைக்கான நுழைவாயில், பௌத்தாலோக மாவத்தையிலிருந்து மைட்லேண்ட் பிளேஸூக்கான நுழைவாயில், ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தையிலிருந்து இலங்கை மன்ற கல்லூரி வீதிக்கான நுழைவாயில் ஆகியன தற்காலிகமாக மூடப்படவுள்ளது.

அத்துடன் ஒத்திகை காலத்தில் ஹோட்டன் பிளேஸில் இருந்து சுதந்திர சதுக்கம் ஊடான மைட்லேண்ட் பிளேஸூக்கான நுழைவாயில் மூடப்படும் என பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வருகை தரும் வாகனங்கள் ஒத்திகையினை பாதிக்காத வகையில் பயணிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## வெள்ளம் பாதித்த விவசாய நிலங்களுக்கு 30ஆம் திகதியிலிருந்து இழப்பீட்டு தொகை

கொழும்பு, ஜன. 30

வெள்ள அனர்த்தினால் சேதமடைந்த விவசாய நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை எதிர்வரும் 30 ஆம் திகதியிலிருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

இதன் போது பொலனறுவை,முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கே இந்த இழப்பீட்டுத் தொகை வழங்கப்படவுள்ளது.

பெயர்ப்பட்டியல் பிரதேசங்களுக்கு பொறுப்பான கமநல சேவை உத்தியோகத்தர்களின் ஆலோசனைக்கு அமைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபைக்கு கிடைக்கப் பெற்றமையை தொடர்ந்து இழப்பீட்டுத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

13 ஆயிரத்து 379 ஹெக்ரேயருக்கும் அதிக நிலப் பரப்பு பாதிக்கப்பட்டுள்ளதுடன், இதன் காரணமாக 6234 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்காக 166.7 மில்லியன் ரூபாவை ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் இழப்பீட்டுத் தொகையை வைப்பிலிடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## இலங்கை போக்குவரத்து சபை தலைவர் ரமால் இராஜினாமா!

கொழும்பு, ஜன. 30

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் ரமால் சிறிவர்தன தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது இராஜினாமாவை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன உறுதிப்படுத்தியுள்ளார்.

அரச நிறுவனமொன்றில் தற்போதைய அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட தலைவர் ஒருவர், நியமிக்கப்பட்டு ஏறக்குறைய ஒரு மாதத்துக்குள் இராஜினாமா செய்த இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

முன்னதாக, இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் செனேஷ் திஸாநாயக்கவும் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மகிந்தவுக்கு ஏதும் பாதிப்பு ஏற்பட்டால் நாட்டில் மீண்டும் கலவரம் வெடிக்கும்!

## முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஜன. 30

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு நாட்டுக்கு முக்கியமானது. அவருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் இந்த நாட்டில் மீண்டும் கலவரம் தோற்றம் பெறும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவது தொடர்பில் அனைவருடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவோம் என முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கொழும்பில் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அனைவரும் ஒன்றிணைந்து போட்டியிட வேண்டும், செயற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம்.

பொருளாதார மீட்சிக்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானங்கள் சிறந்தது என்பதால் ஜனாதிபதித் தேர்தலில் அவருக்கு ஒத்துழைப்பு வழங்கினோம்.

எமது இடைக்கால அரசாங்கத்தின் தீர்மானங்கள் சரி என்று ஏற்றுக் கொள்ளும் நிலையில் மக்கள் இன்று உள்ளார்கள். பொதுஜன பெரமுனவுக்கு எதிராக நாங்கள் செயற்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீதான கௌரவம் இன்றும் அவ்வாறே உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு நாட்டுக்கு முக்கியமானது. அவருக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் இந்த நாட்டில் மீண்டும் கலவரம் தோற்றம் பெறும்.

எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள தேர்தல்களில் போட்டியிடுவது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் திலித் ஜயவீர, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்கவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். தற்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (அ)

## சிவப்பு அரிசி விற்பனையில் மோசடி!

கொழும்பு, ஜன. 30

சிவப்பு அரிசிக்குப் பதிலாக வெள்ளை அரிசியைக் கலந்து விற்பனை செய்யும் மோசடி குறித்து தகவல் கிடைத்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

சந்தையில் சிவப்பு பச்சை அரிசி பற்றாக்குறை காரணமாக சில தொழிலதிபர்கள் இந்த மோசடியை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதன்படி, இது தொடர்பாக சோதனைகளை நடத்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார்.

இதற்கிடையில், கடந்த சில நாட்களில், நுகர்வோர் விவகார அதிகார சபை ஒழுங்குமுறை விலையை விட அதிகமாக அரிசி விற்பனை செய்ததற்காக 140இற்கும் மேற்பட்ட சோதனைகளை முன்னெடுத்துள்ளது.

கம்பஹா பகுதியில் உள்ள ஒரு பல்பொருள் அங்காடி நேற்று நடத்தப்பட்ட சோதனையின்போது அதிக விலைக்கு அரிசியை

விற்றதற்கு எதிராக ஒரு மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தகவல் பணிப்பாளர் அசேல பண்டார மேலும் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவை சிகிச்சைகளுக்காக அதிகமானோர் காத்திருப்பு!

## துரிதப்படுத்த அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜன. 30

**வைத்தியசாலைகளில் அறுவைச் சிகிச்சைகளை துரிதப்படுத்துவதற்காக, கடமை நேரத்துக்குப் பின்னர் மேற்கொள்ளப்படும் அறுவைச் சிகிச்சைகளுக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து பணியாளர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.**


நோயாளிகளுக்கு அதிக நன்மைகளை வழங்கும் வகையில், ஜனாதிபதி நிதியத்தின் செயல்பாடுகளை கிராம மட்டத்துக்கு விரிவுபடுத்துவதற்கும் பிரதேச செயலகம் மூலம் சேவைகளை இணையவழி மூலம் வழங்குவதற்கும் ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாகக் குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

2025 ஆம் ஆண்டுக்காக ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபை, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் கூடியபோது, இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஜனாதிபதி நிதியத்தின் நன்மைகள் உண்மையாக மக்களைச் சென்றடையும் வகையில் வினைத்திறனான சேவைகளை வழங்கும் வகையில் திட்டம் தயாரித்தல், புதிய யோசனைகள் மற்றும் தற்போதுள்ள பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அரச வைத்தியசாலைகளில் அறுவைச் சிகிச்சைகளுக்காக காத்திருப்போர் பட்டியலில் அதிக எண்ணிக்கையிலானோர் காத்திருப்பது குறித்து இதன் போது ஆராயப்பட்டது. இதற்கான தீர்வாக கடமை நேரத்திற்குப் பிறகு அறுவைச் சிகிச்சைகளை மேற்கொள்வதற்கும், அந்த சேவையை முன்னெடுக்கும் பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்க ஜனாதிபதி நிதியிலிருந்து நிதி ஒதுக்குவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. தற்பொழுது இந்த முறைமை கராப்பிட்டிய வைத்தியசாலைகளில் மாத்திரம் முன்னெடுக்கப்படுவதாகவும், எதிர்காலத்தில் அதனை தேசிய வைத்தியசாலை, கண்டி மற்றும் லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை என்பவற்றிலும் முன்னெடுப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வசதிகளை வழங்குவதை மேலும் விரிவுபடுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டதோடு க.பொ.த சாதாரண தரம் மற்றும் உயர்தரத்தில் கல்வி கற்கும் பிள்ளைகளை மையமாகக் கொண்டு புதிய திட்டங்களை ஆரம்பிப்பதற்கும் தற்பொழுது முன்னெடுக்கப்படும் திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி நிதியத்தின் நிர்வாக சபை கூட்டத்தில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, சபாநாயகர் வைத்தியர் ஜகத் விக்ரமரத்ன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் மற்றும் ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரொசான் கமகே, பேராசிரியர் ஜே.ஆர்.பி. ஜயக்கொடி, முன்னாள் கணக்காய்வாளர் நாயகம் சரத் சந்திரசிறி மாயாதுன்னே மற்றும் ஜனாதிபதி நிதியத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர். (அ)



# பெண்கள், குழந்தைகள் விவகார அமைச்சரை சந்தித்த ஜூலி சங்!

கொழும்பு, ஜன. 30

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சர் சரோஜா சாவித்ரி போல்ராஜ் ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார அமைச்சில் நடைபெற்றுள்ளது .

இதில் இலங்கைப் பெண்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பை வளர்ப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மகளிர் மற்றும் குழந்தைகள் விவகார பிரதி அமைச்சர் நாமல் சுதர்ஷனவும் கலந்து கொண்டிருந்த மையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இலங்கை சுங்கம், மதுவரி, இறைவரி திணைக்களங்களில் சீர்திருத்தங்கள்!

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 30

நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கும் தற்போதைய அரசாங்கம் சாத்தியமான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச சுங்க தினத்தை முன்னிட்டு சுங்கத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஆண்டு சுங்கத்திற்கு வழங்கப்பட்ட பொறுப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை சீராக்க சுங்கம் மேற்கொண்ட முன்னெடுப்புகள் பாராட்டத்தக்கவை. கடந்த ஆண்டு சுங்கம் அடைந்த இலக்குகளை நாங்கள் பாராட்டுறோம்.

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை, வருவாய் இலக்குகளை அடைவதன் மூலம் மட்டும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது.

பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க, வருமான விகிதத்தை அதிகரிக்க வேண்டும்.

பொருளாதார சரிவு காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சந்தை சுருங்கியது. சர்வதேச நாணய நிதியத்தின் அளவீடுகளின்படி நாம் அனைத்து பணிகளையும் மேற்கொள்கிறோம். எனவே, மேலோட்டமாகப் பார்க்கும் போது பொருளாதார தேகம் மீண்டுவிட்டதாகத் தோன்றினாலும், முழு பொருளாதார கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொருளாதார நெருக்கடியை சீராக்க நாம் கவனமாக செயற்பட வேண்டும்.

ஒரு சிறிய தவறு கூட பொருளாதாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும். எனவே, சுங்கத் திணைக்களம் 2550 பில்லியன் ரூபாய் வருமான இலக்கை எட்டுவதற்கு கூட்டாகச் செயல்பட வேண்டும். சுங்கத்திற்கான வசதிகளை வழங்குவது தொடர்பிலும் புதிய சம்பள அளவை ஸ்தாபிப்பது தொடர்பிலும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன.



அது குறித்து நிதியமைச்சு, திறைசேரியுடன் கலந்துரையாடி தீர்வொன்றை வழங்க எதிர்பார்க்கிறேன்.

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. அரச சேவையை மேலும் திறம்படச் செயற்படுத்த, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பத்தை இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. வலுவான நிறுவன கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம் - என்றார். (அ)

# மே மாதம் வருவார் பஸில்!

கொழும்பு, ஜன. 30

அமெரிக்கா சென்றுள்ள முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, எதிர்வரும் மே மாதம் நாடு திரும்புவார் என்று மகிந்த ராஜபக்ஷ குடும்ப உறுப்பினரான உதயங்க வீரதுங்க தெரிவித்துள்ளார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாட்டைவிட்டு வெளியேறிய பஸில் ராஜபக்ஷ, மீண்டும் எப்போது நாடு திரும்புவார் என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

"பொதுஜன பெரமுன கட்சியை பஸில் ராஜபக்ச நினைத்தால் நிச்சயம் மீண்டெழ வைக்க முடியும். எனினும், அவர் அரசியலில் இருந்து ஒதுங்கிவிட்டார்.

பஸில் ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்கு வருவதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் விரும்பவில்லை. மகிந்த ராஜபக்ஷ மீது அநுரகுமார திஸாநாயக்க மதிப்பு வைத்துள்ளார். எனவே, மகிந்தவை வீட்டைவிட்டு வெளியே அனுப்பமாட்டார். அப்படி அனுப்பினாலும் பொருத்தமான வீடொன்று வழங்கப்படவுள்ளது." - என்றார்.

(அ)

# அரசினால் பிரச்னைகளுக்கு தீர்வை வழங்க முடியவில்லை!

## முஜிபுர் ரஹ்மான் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 30

அரசாங்கத்தினால் எந்த பிரச்னைகளுக்கும் தீர்வை பெற்றுக்கொடுக்க முடியவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாத நிலைப்பாடே தற்போது ஏற்பட்டுள்ளது. அத்தியாவசியப்பொருட்கள், மின்கட்டணம் மற்றும் பாடசாலை உபகரணங்களுக்கான விலையை குறைக்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் கூறியது.

அத்துடன் அரிசிப் பிரச்னை குறித்த விடயத்தில் அரசாங்கம் மந்த கதியில் செயற்படுகின்றமையையே அவதானிக்க முடிகின்றது. அரசாங்கத்தினால் உரிய தீர்வை பெற்றுக் கொடுக்க முடியவில்லை. - என்றார்

(அ)

# சுகாதார வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்ட கால எல்லையை நீடிப்பு

கொழும்பு, ஜன. 30

தெரிவு செய்யப்பட்ட மருத்துவமனைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கால எல்லையை நீடிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சீன அரசின் உதவியுடன் அமுல்படுத்தப்படும் சுகாதார வசதிகளை மேம்படுத்தும் கருத்திட்டத்தின் கீழ் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்கி தெரிவு செய்யப்பட்ட மருத்துவமனைகளில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல் மேற்கொள்ளப்படுகிறது.

குறித்த திட்டத்தின் கீழ் 13 மருத்துவமனைகள் பல்வேறு விசேட அலகுகளை உள்ளடக்கிய மருத்துவமனை கட்டடத்தொகுதிகளை நிர்மாணிப்பதற்கும், அவற்றுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்குவதற்கும் ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேற்குறித்த கருத்திட்டத்தின் கீழ் 08 மருத்துவமனைகளின் நிர்மாண செயற்பாடுகள் நிறைவடைந்துள்ளன. ஒரு மருத்துவமனை தவிர ஏனைய நான்கு மருத்துவமனைகள் 90% முன்னேற்றத்தை தாண்டியிருப்பதனை கருத்திலெடுத்து கருத்திட்டத்தின் செயற்பாடுகளை விரைவாக நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த கருத்திட்டத்தின் காலப்பகுதியை 2025-12-31 வரை நீடிப்பதற்காக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது -என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனத்துறை கையகப்படுத்தியுள்ள காணிகள் விடுவிக்கப்படவேண்டும்

## குகதாசன் எம். பி. வலியுறுத்தல்

திருகோணமலை, ஜன.30

**பறையன்குளம் பகுதியில் அமைந்துள்ள எல்லைக் காளியம்மன் கோவிலைச் சுற்றியுள்ள காணிகளை வனத்துறை கையகப்படுத்தியுள்ள நிலையில் குறித்த பகுதி விடுவிக்கப்பட வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் வலியுறுத்தியுள்ளார்.**

திருகோணமலை மாவட்ட மொரவேவா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றையதினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கருத்து தெரிவித்த குகதாசன் எம்.பி., மொரவேவா பகுதியில் அமைந்துள்ள நாலாம் கண்டத்தில் உள்ள காணி உரிமையாளர்கள் தத்தம் காணிகளில் குடியமர நீண்ட காலமாக அனுமதிக்கப்படாமை பற்றியும் அவர்களை உடன் குடியமர்த்த ஆவன செய்ய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அத்தோடு, பறையன்குளம் பகுதியில் அமைந்துள்ள எல்லைக் காளியம்மன் கோவிலைச் சுற்றியுள்ள காணிகளை வனத்துறை கையகப்படுத்தியுள்ளதாகவும் இவற்றை விடுவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

வனத்துறை அதிகாரிகள் மேலிடத்தோடு பேசி இது பற்றி அறியத் தருவதாகக் கூறினர். பன்மதவாச்சி ஊரில் வடிகால் வசதிகள் சரியாக இல்லை என்றும் இதன் காரணமாக வீடுகளுக்குள் வெள்ளம் புகுவதாகவும் இதைத் தடுக்க வடிகால்களை மறுசீரமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இதனடிப்படையில், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுப்பதாக கூறினர். முதலிக் குளம் பாடசாலையில் பௌதீக வளங்கள் பற்றாக்குறையாக காணப்படுவதாகவும் இவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும் எனவும் குகதாசன் கேட்டுக் கொண்டார்.

வளப்பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுப்பதாக கல்வித் திணைக்கள அதிகாரிகள் உறுதியளித்தனர். (எ)



# நிந்தவூர் பிரதேசத்தின் ஒருங்கிணைப்பு கூட்டம்

நிந்தவூர், ஜன.30

நிந்தவூர் பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச செயலகங்களுக்கான ஒருங்கிணைப்பு குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ. ஆதம் பாவா தலைமையில் பிரதேச செயலாளரின் நெறிப்படுத்தலின் கீழ் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர்களான எம். எஸ். உதுமாலெப்பை, அஷ்ரப் தாஹிர் மற்றும் திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டு தங்களது ஆக்கபூர்வமான கருத்துகளை வெளிப்படுத்தினர்.

மேலும் இந்தக் கூட்டத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம், பிரதேச மட்டத்திலான பிரச்னைகள் குறித்தும் ஆராயப்பட்டன. (எ)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் உள வள ஆலோசனை செயலமர்வு



சம்மாந்துறை, ஜன.30

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு உளவள ஆலோசனைகளை வழங்கி அவர்களை நாட்டுக்கு நல்ல பிரஜைகளாக மாற்றும் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ள, பணியாளர்கள் மற்றும் அதனோடு தொடர்புடையவர்களுக்கான "பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயனுள்ள ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலுக்கான அத்தியாவசிய திறன்கள் மற்றும் நெறிமுறைகள் செயலமர்வு" என்ற தொனிப்பொருளிலான செயலமர்வு தென்கிழக்கு பல்கலைக்கழக ஊழியர் மேம்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் நிலையத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் எச். எம். நிஜாம் தலைமையில் நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில், பிரதம விருந்தினராக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீத் கலந்து கொண்டு நாட்டுக்கு நல்ல பிரஜைகளை உருவாக்கும் உயரிய பணியில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக ஊழியர்களின் பணிகளை பாராட்டியதுடன் எதிர்காலத்தில் மாணவர்களின் நன்னடத்தையில் மேலும் முன்னேற்றங்கள் ஏற்பட சம்மந்தப்பட்டவர்கள் கரிசனை செலுத்த வேண்டும் என்றும் குறித்த விடயம் தொடர்பில் கடந்த காலங்களில் தான் பெற்ற அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார். (எ)


# சுகாதாரம் பேணாத உணவகங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை

சாய்ந்தமருது, ஜன.30

சுகாதாரம் பேணாத உணவகங்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் நேற்று முன்தினம் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் ஆலோசனைக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் தலைமையில் இந்த திடீர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது, சாய்ந்தமருது பிரதான வீதியில் உள்ள உணவு கையாளும் நிறுவனங்கள், வியாபார நிலையங்கள் பரிசீலனை செய்யப்பட்டு சுகாதார நிலைகளை ஒழுங்காக



பேணாத வர்த்தகர்களுக்கு எச்சரிக்கையும், அறிவுறுத்தலும் கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி தங்களது சுற்றுச்சூழலை நுளம்புகள் பெருகக்கூடிய வகையில் வைத்திருந்தவர்களுக்கு எதிராகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எல். ஜெரின் உட்பட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு களத்தடுப்பு உதவியாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

மேலும், முறையான அனுமதிப் பத்திரம் இல்லாத உணவகங்கள், மருத்துவ சான்றிதழ் இல்லாது உணவகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் மற்றும் முறையான கழிவு நீர் தொட்டி இல்லாத, குளிர்சாதனப் பெட்டிகள் முறையாக பராமரிக்காத, தனி நபர் சுகாதாரம் பேணாத, சமைக்கும் இடங்களை சுகாதாரமாக பேணாத உணவகங்கள், பேக்கரிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். மக்களின் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும், பொறுப்புமாகும் என சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி மதன் தெரிவித்தார். (எ)

# அமைச்சரவை பேச்சாளரின் அறிவிப்பு ஜனநாயகம், சட்டத்துக்கு முரணானது

## சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்ப்பு

கல்முனை, ஜன.30

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படும் என்று அமைச்சரவை பேச்சாளர் அறிவித்துள்ளமை ஜனநாயகத்துக்கும் சட்டத்துக்கும் முரணானது என்று நாங்கள் கருதுகிறோம் என சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான எம். நிஸாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், தற்பொழுது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மன்ற



தேர்தல் விசேட சட்ட மூலத்தின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனு பெறப்படும் திகதியை அறிவிக்கும் முழு அதிகாரமும் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கும் அவர்களுக்கு கீழ் இயங்கும் தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதத்துக்குள் உள்ள ஒரு திகதியாக வேண்டும்.

ஆகவே, தேர்தல்கள் ஆணைக்குழு சகல அரசியல் கட்சி செயலாளர்களை அழைத்து கலந்தாலோசித்த பிற்பாடு திகதி அறிவிக்கப்பட வேண்டும்.

அரசாங்கத்துக்கோ அல்லது ஒரு கட்சிக்கோ சாதகமாக திகதியை தீர்மானிப்பது ஜனநாயகத்துக்கு விரோதமான செயலாக நாங்கள் கருதுகிறோம்"- என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெள்ள நிவாரண உதவிகள்

திருக்கோவில், ஜன.30

மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்ட மக்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 6 இலட்சம் ரூபாய் செலவில் வெள்ள நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

திருக்கோவில், விநாயகபுரம், உமிரி, திருப்பதி, ஆகிய 5 கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 200 குடும்பங்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

இந்த உதவித் திட்டத்தை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கினார். (எ- 02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ச்சிக் குழு - பொலிஸ் இடையே மோதல்

# கொங்கோவில் சிறையிலிருந்து 6,000 கைதிகள் தப்பியோட்டம்!



கின்சாசா, ஜன.30

**கொங்கோவில் கிளர்ச்சியாளர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே இடம்பெற்ற மோதலால் முன்செஸ்க் நகரிலுள்ள சிறைச்சாலையில் இருந்து 6 ஆயிரம் கைதிகள் தப்பியோடியுள்ளனர்.**

கிழக்கு ஆபிரிக்க நாடான கொங்கோ ஜனநாயக குடியரசில் பொதுமக்களை குறி வைத்து எம் - 23 என்ற கிளர்ச்சி குழு அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறது. எனவே, அவர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையாக போராடி வருகிறது. இதற்கிடையே கோமா நகரில் ஊடுருவிய கிளர்ச்சியாளர்கள் அங்கு சரமாரி தாக்குதல் நடத்தினர். இதில், ஐ. நாவின் அமைதிப் படையினர் உட்பட 13 பேர் பலியாகினர்.

இதன் தொடர்ச்சியாக முன்செஸ்க் நகரில் உள்ள சிறைச்சாலை பகுதியிலும் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நடத்தினர். அப்போது சிறைக் காவலர்களுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல் இடம் பெற்றது. இதனை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்டு அங்கிருந்த கைதிகள் அனைவரும் தப்பியோட்டம் பிடித்தனர். இதில் சுமார் 6 ஆயிரம் கைதிகள் அங்கிருந்து தப்பியோடியதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது. (எ)



# அணு ஆயுத உற்பத்தி மையத்தை ஆய்வு செய்தார் கிம் ஜோங் உன்

பியாங்யாங், ஜன.30

அணு ஆயுத உற்பத்தி மையத்தை வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் ஆய்வு செய்துள்ளார்.

வடகொரியா கண்டம் விட்டு கண்டம் தாண்டும் அணு ஆயுதங்களை தாங்கி செல்லும் ஏவுகணைகளை சோதனை செய்து உலக நாடுகளுக்கு அவ்வப்போது அதிர்ச்சி கொடுத்து வருகிறது. மேலும், தங்கள் வசம் உள்ள அணு ஆயுதங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நடவடிக்கையிலும் வடகொரியா ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், வடகொரியாவில் உள்ள அணு ஆயுத உற்பத்தி மையத்தை ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அணு ஆயுத உற்பத்திக்கு தேவையான யுரேனிய செறிவூட்டலை மேலும் அதிகரிக்க அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். (எ)



# பங்களாதேஷுக்கு நிதியுதவி இல்லை

வாஷிங்டன், ஜன.30


அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் உத்தரவையடுத்து பங்களாதேஷுக்கான நிதியுதவி நிறுத்தப்பட்டுள்ளது.

இதுபோன்று வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் நிதியுதவி மற்றும் பல்வேறு சர்வதேச நிதியுதவி திட்டங்களையும் 90 நாட்களுக்கு நிறுத்த ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். இஸ்ரேல், எகிப்து நாடுகளுக்கு வழங்கப்படும் இராணுவ உதவிக்கு மட்டும் விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது. அனைத்து வெளிநாட்டு நிதியுதவி திட்டங்கள் குறித்தும் மறுஆய்வு செய்து ட்ரம்புக்கு 85 நாட்களில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த உத்தரவின் அடிப்படையில், சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க முகமை முகமது யூனுஸ் தலைமையிலான பங்களாதேஷ் இடைக்கால அரசுக்கு வழங்கி வரும் நிதியுதவியை நிறுத்தியுள்ளது. இது தொடர்பாக பங்களாதேஷ் அரசுக்கு முறைப்படி தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

ஊழலுக்கு எதிராக தொடர் போராட்டம்

# செர்பியாவின் பிரதமர் வுசெவிக் இராஜினாமா



பெல்கிரேட், ஜன.30

செர்பியாவின் பிரதமர் மிலோஸ் வுசெவிக் தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.

அந்த நாட்டில் உள்ள நோவிசாட் நகரில், கடந்த நவம்பர் மாதம் முதலாம் திகதி, ரயில் நிலையத்தின் மேற்கூரை இடிந்து விழுந்து 15 பேர் உயிரிழந்தனர். அந்த ரயில் நிலையத்தில் நடந்த சீரமைப்பு பணிகளில் ஊழல் நடந்திருப்பதாக குற்றச்சாட்டு எழுந்த நிலையில், இதனைக் கண்டித்து நாடு தழுவிய ரீதியில் போராட்டம் வெடித்தது.

இந்த விவகாரம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் உட்பட, பல்வேறு அரசு அதிகாரிகள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதற்கிடையில், ஊழல் குற்றச்சாட்டு விவகாரத்தில் செர்பியா பிரதமர் மிலோஸ் வுசெவிக்கை கண்டித்து பொதுமக்கள் தொடர் போராட்டங்களை நடத்தினர்.

அதுமட்டுமின்றி, செர்பியாவில் ஜனநாயக சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாகவும், சர்வாதிகார போக்கு அதிகரித்து வருவதாகவும் மிலோஸ் வுசெவிக் அரசாங்கத்தின் மீது பொதுமக்கள் தொடர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.

இந்த நிலையில், செர்பியா பிரதமர் மிலோஸ் வுசெவிக், தனது பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார். (எ)

# ஊழியர்கள் போராட்டம் ரயில் சேவை முடக்கம்

பங்களாதேஷ் அரசுக்கு நெருக்கடி

டாக்கா, ஜன.30

பங்களாதேஷில் ஊழியர்களின் போராட்டத்தால் ரயில் சேவை முற்றாக முடங்கியது. இதனால், முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷில் இட ஒதுக்கீட்டுக்கு எதிராக கடந்த ஆண்டு நாடு முழுவதும் போராட்டம் நடைபெற்றது. இதன் முடிவில் பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு தப்பியோடி இந்தியாவில் தஞ்சம் புகுந்தார். இந்த நிலையில் அங்கு முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால ஆட்சி நடைபெற்று வருகிறது.

இதற்கு மத்தியில் சம்பள உயர்வு, ஓய்வூதியம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அங்குள்ள ரயில்வே ஊழியர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டக்காரர்களுடன் இடைக்கால அரசாங்கம் பேச்சு நடத்தியது. ஆனால், அந்தப் பேச்சுவார்த்தையில் எந்தவித உடன்பாடும் எட்டப்படவில்லை. இதனையடுத்து நாடு முழுவதும் உள்ள சுமார் 25 ஆயிரம் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால், ரயில் சேவை முற்றாக முடங்கியது. பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினர். (எ)

# தென் கொரியாவில் திடீரென தீப்பிடித்த பயணிகள் விமானம்



சியோல், ஜன.30

தென் கொரியாவின் பூசன் நகரில் உள்ள கிம்ஹே சர்வதேச விமான நிலையத்தில் இருந்து ஹொங்கொங் நோக்கி நேற்று முன்தினம் காலை பயணிகள் விமானம் புறப்படத் தயாராக இருந்தது. அதில் பயணம் செய்ய பயணிகள் 169 பேர், விமான பணியாளர்கள் 7 பேர் என அனைவரும் விமானத்தில் ஏறினர்.

விமானம் புறப்பட தயாரானபோது விமானத்தின் ஒரு பகுதியில் திடீரென தீப்பற்றியது. பின்னர் மளமளவென விமானத்தின் மற்ற பகுதிகளுக்கும் தீ பரவியது. இதனால் பயணிகள் பீதியடைந்தனர். பயணிகள் மற்றும் விமான ஊழியர்கள் என அனைவரும் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். (எ)

# கும்பமேளாவில் நெரிசல்; 31 பேர் உயிரிழந்தனர்

புதுடில்லி,ஜன.30

வட இந்தியாவில் நேற்று முன்தினம் மவுனி அமாவாசை என்பதால் உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவில் திரிவேணி சங்கமத்தில் புனித நீராட அதிக அளவில் பக்தர்கள் திரண்டிருந்த நிலையில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 31 ஆக அதிகரித்துள்ளது. (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அடித்து நொறுக்கிய ஆஸி. இலங்கை அணி பரிதாபம்

காலி, ஜன.30

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி, 50 ஓவர்களுக்குள் 230 ஓட்டங்களை கடந்தது.

இலங்கை வந்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி தலா 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகளில் விளையாடுகிறது. இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலாவது டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் நேற்றுப் புதன்கிழமை காலை 10 மணிக்கு தொடங்கியது.

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸூக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளதால் அணியை அந்த அணியை ஸ்டீவன் சுமித் வழிநடத்துகிறார். இந்த தொடரில் ட்ராவிஸ் ஹெட் உஸ்மான் கவாஜாவுடன் இணைந்து தொடக்க ஆட்டக்காரராக விளையாடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் முதலில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலிய அணி நேற்று முதல் நாள் ஆட்டத்தில் 55 ஓவர்களில் 248 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இரண்டு விக்கெட்கள் மட்டும் இழந்துள்ள ஆஸி அணியின் தொடக்க வீரர் கவாஜா அதிரடியாக விளையாடி சதமடித்துள்ளார். அவர் 108 ஓட்டங்களுடனும் சுமித் 62 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (எ)

## உலகக் கிண்ணத்தில் திரிஷா சாதனை சதம்



கோலாலம்பூர், ஜன.30

ஜூனியர் ரி - 20 மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் ஸ்கொட்லாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்திய அணியின் தொடக்க வீராங்கனையான திரிஷா கோங்கடி சதம் விளாசினார். இதன் மூலம் ஜூனியர் ரி - 20 உலகக் கிண்ணத் தொடரில் சதம் அடித்த முதல் வீராங்கனை என்ற சாதனையை படைத்தார்.

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் இந்தக் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் சுப்பர் சிக்ஸ் சுற்றில் இந்திய அணி, ஸ்கொட்லாந்துடன் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 208 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீராங்கனையான திரிஷா கோங்கடி 59 பந்துகளில், 4 சிக்ஸர்கள், 13 பௌண்ட்ரிகளுடன் 110 ஓட்டங்கள் விளாசினார்.

அவருக்கு உறுதுணையாக விளையாடிய கமலினி 42 பந்துகளில், 9 பௌண்ட்ரிகளுடன் 51 ஓட்டங்களும், சனிகா ஷால்கே 29 ஓட்டங்களும் சேர்த்தனர். 209 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 14 ஓவர்களில் 58 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இந்திய அணி தரப்பில் ஆயுஷி சுக்லா 4, வைஷ்ணவி சர்மா 3, திரிஷா கோங்கடி 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறியது. (எ)


# 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணி வெற்றி

ராஜ்கோட், ஜன.30

இந்தியாவுக்கு எதிரான 3ஆவது ரி - 20 போட்டியில் இங்கிலாந்து அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஜோஸ் பட்லர் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையிலான 5 ஆட்டங்கள் கொண்ட ரி - 20 கிரிக்கெட் தொடரில் முதல் இரண்டு போட்டிகளில் இந்திய அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் 3ஆவது போட்டி ராஜ்கோட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி சார்பில் லியாம் லிவிங்ஸ்டன் 24 பந்துகளில் 43 ஓட்டங்கள் விளாசினார். அவரது இன்னிங்ஸில் 5 சிக்ஸர்கள் அடங்கும்.



இந்தியா சார்பில் வருண் சக்கரவர்த்தி 4 ஓவர்கள் வீசி 24 ஓட்டங்கள் கொடுத்து 5 விக்கெட்களை கைப்பற்றினார். இந்த நிலையில், 172 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்தியா துடுப்பெடுத்தாடியது. ஆனால், அந்த அணியால் 145 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால், இங்கிலாந்து அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)

## ரென்னிஸ் தரவரிசை பட்டியலில் ஜோகோவிச், கீஸ் முன்னேற்றம்

புதுடில்லி, ஜன.30

ரென்னிஸ் தரவரிசை பட்டியலில் ஜோகோவிச், கீஸ் முன்னேறியுள்ளனர்.


'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து கொண்ட அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடர் சமீபத்தில் நிறைவடைந்தது. இதனையடுத்து சர்வதேச ரென்னிஸ் கூட்டமைப்பு வீரர் மற்றும் வீராங்கனைகளின் புதிய தரவரிசை பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் அவுஸ்திரேலிய ஓபன் சம்பியனான இத்தாலியின் ஜன்னிக் சினெர் முதலிடத்திலும், ஜேர்மனியின் அலெக்ஸ்சாண்டர் ஸ்வெரேவ் 2ஆவது இடத்திலும், ஸ்பெயினின் கார்லஸ் அல்காரஸ் 3ஆவது இடத்திலும் மாற்றமின்றி தொடர்கின்றனர்.

முன்னாள் நம்பர் 1 வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் ஓர் இடம் முன்னேறி 6ஆவது இடத்தை பிடித்துள்ளார்.

பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் பெலாரஸின் அரினா சபலெங்கா முதலிடத்திலும், போலந்தின் இகா ஸ்வியாடெக் 2ஆவது இடத்திலும், அமெரிக்காவின் கோகோ காப் 3ஆவது இடத்திலும் நீடிக்கின்றனர்.

அவுஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டத்தை வென்ற அமெரிக்காவின் மேடிசன் கீஸ் 7 இடங்கள் முன்னேறி 7ஆவது இடத்தை பிடித்துள்ளார். (எ)





## வித்தியாசமான சாதனையை படைத்த வருண் சக்கரவர்த்தி

ராஜ்கோட், ஜன.30

சர்வதேச ரி - 20 கிரிக்கெட் வரலாற்றில் வருண் சக்கரவர்த்தி வித்தியாசமான சாதனை படைத்துள்ளார்.

இந்தியா - இங்கிலாந்து இடையே 3ஆவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் ராஜ்கோட்டில் நடைபெற்றது.

இதில் இந்திய தரப்பில் சிறப்பாக பந்துவீசிய வருண் சக்கரவர்த்தி 4 ஓவர்களில் 24 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

இருப்பினும், இந்தியா 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்த ஆட்டத்தையும் சேர்த்து இந்திய சுழற்பந்து வீச்சாளர் வருண் சக்கரவர்த்தி சர்வதேச ரி- 20 போட்டியில் 5 விக்கெட்கள் எடுப்பது இது 2ஆவது முறையாகும். ஏற்கனவே அவர் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 5 விக்கெட்கள் வீழ்த்தியிருந்தார். ஆனால், இந்த 2 போட்டிகளிலும் இந்திய அணி தோல்வியையே சந்தித்துள்ளது.

இதன் மூலம் சர்வதேச ரி - 20 கிரிக்கெட் போட்டி வரலாற்றில் தோல்வியடைந்த போட்டிகளில் இரண்டு முறை 5 விக்கெட்களை வீழ்த்திய முதல் பந்துவீச்சாளர் என்ற வித்தியாசமான சாதனையை வருண் சக்கரவர்த்தி படைத்துள்ளார். (எ)

## சுனில் கவாஸ்கர் மீது ரோஹித் சர்மா புகார்

மும்பை, ஜன.30

இந்திய அணியின் முன்னாள் வீரர் சுனில் கவாஸ்கர் தொடர்பில் பி. சி. சி. ஐயிடம் ரோஹித் சர்மா முறைப்பாடு செய்துள்ளார்.

நியூசிலாந்து மற்றும் அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடர்களில் இந்திய அணி தோல்வியடைந்தது. இதில் துடுப்பாட்ட வீரராக மட்டுமின்றி தலைமைத்துவத்திலும் சொதப்பிய ரோஹித் சர்மா தோல்விக்கு முக்கிய காரணமானார். இதனால் அவர் மீது கடுமையான விமர்சனங்கள் எழுந்தன. குறிப்பாக சுனில் கவாஸ்கர் கடுமையாக விமர்சித்தார்.

இதனிடையே உள்ளூர் போட்டிகளில் இந்திய அணி வீரர்கள் அனைவரும் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று பி. சி. சி. ஐ. அறிவுறுத்தியது.

இதனையடுத்து ரோஹித் சர்மா ரஞ்சி கிண்ணத் தொடரில் மும்பை அணி தரப்பில் களமிறங்கினார். ஆனால், இந்தப் போட்டியில் இரண்டு இன்னிங்ஸ்களில் முறையே 3, 28 ஓட்டங்கள் மட்டுமே அடித்து ஏமாற்றத்தை கொடுத்தார்.

இதனால் ரோஹித் சர்மா ரஞ்சி கிண்ண தொடரிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்று கவாஸ்கர் மீண்டும் விமர்சித்தார்.

இப்படி அடுக்கடுக்கான விமர்சனங்களால் கோபமடைந்த ரோஹித் சர்மா, சுனில் கவாஸ்கர் மீது இந்திய கிரிக்கெட் சபையிடம் (பி.சி.சி.ஐ.) முறைப்பாடு செய்துள்ளார். சுனில் கவாஸ்கர் தன்னை தேவையில்லாமல் விமர்சிப்பதாகவும், தனக்கு அழுத்தத்தை கொடுப்பதாகவும் ரோகித் சர்மா முறைப்பாடு செய்துள்ளார்.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அநுராதபுரம்...

இந்த கைது நடவடிக்கையானது அநுராதபுரத்தில் இருந்து வருகை தந்த அநுராதபுரம் பொலிஸாரால் யாழ்ப்பாணம் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் வைத்து முன்னெடுக்கப்பட்டது.

கடந்த பாராளுமன்ற அமர்வுக்காக, கொழும்பு நோக்கி காரில் சென்ற அர்ச்சுனா, அனுராதபுரம் பொலி ஸாரால் வழிமறிக்கப்பட்டவேளை, அவர்களுடன் முரண்பட்டார்.

அதனால், பொலிஸ் உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம், அனுராதபுரம் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்தபோது, அர்ச்சுனா என்பதற்கு பதிலாக சுலோச்சனா என குற்றப் பத்திரிகையில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார். எனினும் நேற்று அவர் கைது செய்யப்பட்டார். (அ-5)

## வடமாகாண...

போராட்டத்தை ஆரம்பித்தனர். இதன்போது, பசுமையை வலியுறுத்தி மக்களுக்கு மரக்கன்றுகளும் விநியோகிக்கப்பட்டன.

வேலை வேண்டும் என கோஷங்களை எழுப் பிய வண்ணம், உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத் தூபியில் இருந்து, யாழ்ப்பாண நகரின் ஊடாக மாவட்ட செயலகம் வரை சென்ற பட்டதாரிகள் அங்கு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் யாழ்ப்பாண வருகையின் போது போராட்டம் நடத்த அழைப்பு விடுத்த வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத் தலைவரை இன்று யாழ்ப்பாண நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு பொலிஸாரால் அழைப்புக் கட்டளை கையளிக்கப்பட்டது. அதனையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட பட்டதாரிகள் கலைந்து சென்றனர். (அ)

## யாழ்.பல்கலை...

பேரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

இதன்போது, பதவி விலகிய யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கலைப் பீட பீடாதிபதி முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுதல் மற்றும் அவர் மீண்டும் பீடாதிபதியாக பதவியேற்பதற்கு உரிய சூழலை உருவாக்குதல் உள்ளிட்ட ஐந்து அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக அங்கீகாரத்தை பல்கலைக்கழக பேரவை வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

அதேநேரம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமை தொடர்பில் உயர் கல்வியமைச்சு கோரிய அறிக்கையை அந்த அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் சிறி சற்குணராசா தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வகுப்பு புறக்கணிப்பு தொடர்வதாக அந்த சங்கத்தின் தலைவர் பேராசிரியர் பி.ஐங்கரன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற பல்கலைக்கழக விசேட பேரவைக் கூட்டத்தில் தங்களது கோரிக்கைகளுக்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதென அறிய முடிவதாக அவர் குறிப்பிட்டார். எனினும் இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது.

குறித்த கூட்டத்தின் பின்னரே தங்களது சங்கம் முன்னெடுத்து வரும் பணிப்புறக்கணிப்பு தொடர்பில் இறுதி தீர்மானம் எடுக்கப்படும் என பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் பி.ஐங்கரன் தெரிவித்தார். (அ)

## யோஷித...

செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யா கோந்தா தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

மேலும் கருத்து தெரிவித்த பாதுகாப்புச் செய லாளர், தனிநபர்களின் தனிப்பட்ட பாதுகாப்புக் காக பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்படும் துப்பாக்கிகளில் இருந்து 182 துப்பாக்கிகள் மட்டுமே பெறப்பட உள்ளதாக அவர் கூறினார்.

அத்துடன் யோஷித ராஜபக்ஷவிடம் மேலும் இரு துப்பாக்கிகள் இருப்பதாகவும், வேறு எந்த துப்பாக்கியும் இதுவரை ஒப்படைக்கப்படவில்லை என்றும் பாதுகாப்பு செயலாளர் குறிப்பிட்டார்.

## யாழ்ப்பாண...

அறிக்கையில்-

எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி நடுக்கட லில் துப்பாக்கிச் சூடு நடத்தி நாகப்பட்டினம் மயிலாடுதுறை காரைக்காலைச் சேர்ந்த மீனவர்கள் 13 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து அட்டூழியம் செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் கடுமையாக காயமடைந்த இரண்டு மீனவர்கள் யாழ்ப்பாணம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் காயடைந்த 3 மீனவர்களும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தமிழக மீனவர்களிடையே கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கை கடற்படையினரின் தமிழக மீனவர்கள் மீது நடத்தப்பட்ட தொடர் தாக்குதல்களை தமிழ்நாடு காங்கிரஸ் சார்பில் வன்மையாக கண்டிக்கிறேன். தாக்குதலுக்கு உள்ளான மீனவர்கள் தகுந்த சிகிச்சை பெற்று தமிழகம் திரும்ப உரிய நடவடிக்கையை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. 2024ஆம் ஆண்டில் மட்டும் இலங்கை கடற்படை 72 மீன்பிடி படகுகளை பறிமுதல் செய்தும் 554 தமிழக மீனவர்களையும் கைது செய்தும் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

தொடர்ந்து தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் மத்திய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கும் பிரதமர் நரேந்திர மோடிக்கும் பலமுறை கடிதம் எழுதியும் இப்பிரச்னை தீர்க்கப்படவில்லை. ஆனால் பா.ஜ.கவினர் கச்சதீவு குறித்து பேசி பிரச்னையை திசை திருப்பும் முயற்சியை செய்து வருகின்றனர். தமிழக மீனவர்களின் பிரச்னைக்கும் கச்சதீவுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்பதை அனைத்து மீனவர்களும் நன்கு அறிவார்கள்.

இராமேஸ்வரத்திலிருந்து சர்வதேச கடல் எல்லை 12 கடல் மைல் தூரத்திலும் கச்சதீவு என்பது 14 கடல் மைல் தூரத்திலும் உள்ளது. இந்நிலையில் சர்வதேச கடல் எல்லையை தாண்டி மீன் பிடித்ததாக தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுகின்றனர். தமிழக மீனவர்களை பொறுத்தவரை இந்திய கடல் பகுதியில் மீன்வளம் இல்லாத நிலையில் இலங்கை கடல் பகுதியில் மீன்வளம் அதிகமாக இருப்பதாலும் அங்கே மீன் பிடிக்க செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் தொடர்ந்து இருந்து வருகிறது.

வல்லரசாக இருக்கிற இந்தியாவின் பிரதமரான மோடி சின்னஞ்சிறிய நாடான இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸ ாநாயக்க வோடு பேச்சு வார்த்தை நடத்தி ஒரு ஒப்பந்தத்தை போட வேண்டும்.

அந்த ஒப்பந்தத்தின் மூலமே தமிழக மீனவர்களின் வாழ்வாதார பிரச்னையை தீர்க்க முடியும். இத்தகைய ஒப்பந்தத்தினால் யாழ்ப்பாண தமிழ் மீனவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்ற உறுதியை இந்திய அரசு தர வேண்டும். - என்றுள்ளது. (அ)

# கிளிநொச்சி பெரியகுளத்தில் மூழ்கிய குடும்பஸ்தர் மரணம்!

கிளிநொச்சி, ஜன. 30

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளத் தில் நீராடிய நபர், சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான கணேசமூர்த்தி ரமேஸ் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று, ஆலயத்தின் தீர்த்தோற்சவம் இடம்பெற்ற போது, குறித்த நபர் மது போதையில் சென்று குளத்தில் பாய்ந்தார்.

சிலர் அவரை தூக்கி வெளியே விட்ட போதும், மீண்டும் குளத்தில் பாய்ந்த நிலையில், அவர் காணாமல் போயிருந்தார்.

பல மணி நேரமாக குறித்த நபரைக் காணாத நிலையில், அப்பகுதி இளைஞர்கள், தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதனையடுத்து, காணமால் போன நபர் சடலமாக மீட்கப்பட்டார். (அ)

## தமிழரசுவின்...

ஆபத்தான நிலையில் செயற்கை சுவாச உதவியுடன் சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மாவை சேனாதிராசா நேற்று இரவு உயிரிழந்தார் என அவரது குடும்ப உறுப்பினர்கள் உறுதிப்படுத்தினர்.

இலங்கை தமிழரசுக் கட்சி வரலாற்றில் ஒரு நிலைகல், மாவை சேனாதிராசா (சோமசுந்தரம் சேனாதிராஜா). இவர் 1942ஆம் ஆண்டு, ஒக்ரோபர் மாதம் 27ஆம் திகதி பிறந்தவர். யாழ்ப்பாணம் வலி.வடக்கு மாவிட்டபுரத்தைச் சொந்த இடமாகக் கொண்டவர்.

மாவிட்டபுரத்தை சேர்ந்தவர் என்பதால் சேனாதிராசா தனது பெயருடன் முன்னிணைப்பாக மாவை என்ற சொல்லை சேர்த்துக் கொண்டார். அந்த கிராமத்தின் கந்தசாமி கடவுள் மாவை கந்தன் என்று அழைக்கப்படுவதை போன்று மாவை சேனாதிராசாவும் மாவிட்டபுரத்தின் மிகவும் பிரபலமான பிரதிநிதியாகவும் விளங்குகிறார். பலர் அவரை எளிதாக சேனாதி, மாவை அல்லது மாவை அண்ணன் என்று அழைக்கிறார்கள்.

தனது இளமைக்கல்வியை வீமன்காமம் பாடசாலையிலும், நடேஸ்வராக் கல்லூரியிலும் கல்வி கற்ற பின்னர், இலங்கைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராக இணைந்து இளங்கலைப் பட்டம் கற்றார்.

சிறிமா பண்டாரநாயக்கவின் ஐக்கிய முன்னணி அரசாங்க காலத்தில் யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பெருமளவு அமைதியின்மை ஏற்பட்ட நாட்கள் அவை. ஹர்த்தால்கள், பகிஷ்கரிப்புகள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், மறியல் போராட்டங்கள், கறுப்புகொடி போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் என்று அந்தக் காலத்தில் பெருவாரியான அரசியல் போராட்டங்கள் நடைபெற்றன. அந்த போராட்டங்களில் முன்னணியிலிருந்து செயற்படும் இளைஞராக மாவை சேனாதிராசா இருந்தார்.

இளம் வயதில் பல்வேறு போராட்டங்களில் கலந்து தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த இன வன்கொடுமை களுக்கு எதிராக குரல் கொடுத்த மாவை 1973இல் கைது செய்யப்பட்டு 1977இல் விடுதலை செய்யப்பட்டிருந்தார். சிறை சென்றதால் பல்கலைக்கழக கற்கையை தொடர முடியாத நிலை ஏற்படவே வெளிவாரி கற்கை, சட்டத்துறை கற்கையையும் தொடர இயலாமல் இடை விலகினார். சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர் 1978இல் இந்தியாவிற்கு சென்ற இவர் அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று பட்டத்தை பெற்றுக்கொண்டார்.

தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளுக்காக சிறுவயது முதலே கிளர்ந்தெழுந்து பல்வேறு அஹிம்சை போராட்டங்களிலே பங்கெடுத்தார். தந்தை செல்வா தமிழ் மக்களுக்காக நடத்திய சத்தியாக்கிரக போராட்டங்களின் போது உடனிருந்து செயற்பட்டார். 11 தடவைகள் கைது செய்யப்பட்டு மொத்தமாக 7 ஆண்டுகளுக்கு மேலாக சிறைவாசம் அனுபவித்தார்.

வாலிப முன்னணியின் செயலாளராகவும், இளைஞர் பேரவையின் செயலாளராகவும் இளம் வயதில் செயற்பட்ட இவர், தமிழரசுக்கட்சியின் உறுப்பினராகவும், தமிழர் விடுதலை கூட்டணியின் அரசியல் குழு உறுப்பினராகவும் தொடர்ந்தும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

சேனாதிராசா 1989 பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிட்டு கூட்டணியின் வேட்பாளர்களில் 13ஆவதாக வந்து தோல்வியடைந்தார். ஆனாலும், அ. அமிர்தலிங்கம் 1989 ஜூலை 13ம் திகதி படுகொலை செய்யப்பட்டதை அடுத்து அவரின் இடத்திற்கு சேனாதிராசா தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். 1999 ஜூலை 29ல் நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து மீண்டும், தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்றார்.

2000ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றதுடன் 2001, 2004, 2010ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தேர்தல்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். செப்ரெம்பர், 2014 இல் சேனாதிராசா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

2020ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்கட்சி முரண்பாடுகள் மற்றும் வாக்கு வீழ்ச்சியால், மாவை சேனாதிராசா தோல்வி கண்டார். இது அவரது நீண்ட அரசியல் பயணத்தில் ஒரு முக்கிய மாற்றமாகும். இலங்கை தமிழரசு கட்சியின் மிக நெருக்கடியான காலங்களில் தலை வராகப் பணியாற்றி கட்சியை கொண்டு செல்வதற்கு பல்வேறுபட்ட முயற்சி களை மேற்கொண்ட ஒரு உன்னதமான நபர் ஆவார்.

மாவை சேனாதிராசாவின் இறுதிச் சடங்கு எதிர்வரும் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மாவிட்டபுரம் அன்னாரின் இல்லத்தில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(அ)

## ஜனாதிபதியின்...

தடை செய்யக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸார் யாழ்.நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று மனு தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன், வடக்கு மாகாண வேலையில்லா பட்டதாரிகள் சங்கத் தலைவர் உள்ளிட்ட ஐவரை இன்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்புக் கட்டளை அனுப்ப யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. தடை உத்தரவு தொடர்பான மனு மீதான விசாரணை இன்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இடம்பெற உள்ளது. (அ-05)

## லாப்ஸ்...

குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி நிரோஷன் ஜே பீரிஸ் கூறினார்.

டிமோ அக்கடமிக்கும் லாப்ஸ் காஸ் நிறுவனத்திற்கும் இடையே நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், லாப்ஸ் எரிவாயு தட்டுப்பாடு இல்லை என்றும், தற்போது அம்பாந்தோட்டை முனையத்தில் 20000 மெற்றிக் தொன் லாப்ஸ் எரிவாயு உள்ளது எனவும் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி நில்வள கங்கைக்கு விஜயம்!

கொழும்பு, ஜன. 30

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி நேற்று நில்வள கங்கைப் பகுதிக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார்.

நில்வள கங்கையை அண்மித்த பகுதிகளில் நிலவும் சுற்றுச்சூழல் பிரச்னை, வெள்ளம் மற்றும் நீர்ப்பாசனப் பிரச்னைகள், உப்புநீர் தொடர்பான பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கும் விடயம் தொடர்பிலான மாத்தறை மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டமையை தொடர்ந்தே அவர் இந்த கண்காணிப்பு விஜயத்தில் இணைந்து கொண்டார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி,

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யக்கூடிய சுற்றுச்சூழல் காரணி இந்த பகுதியில் உள்ளது.

பிரதான பிரச்சினைகள் தொடர்பில் அவதானிக்க முடிகின்றது.

இருப்பினும் தொழிநுட்ப குழுவின் ஊடாக ஆராய்ந்து பிரச்சனைகளுக்கான தீர்வை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதன் ஊடாக நில்வள கங்கையை பாதுகாக்க முடியுமாக இருக்கும்.

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்யும் விடயத்தை அரசாங்கத்தினால் மாத்திரம் மேற்கொள்வது கடினம். ஆகவே சுற்றுலாத்துறை சார் தனியார் நிறுவனங்களையும் இணைத்துக்கொண்டு இந்த வியடத்தை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

சுற்றாடல் நேய விடயங்களை மேற்கொள்ளும் தரப்பினரையே இதில் இணைத்துக்கொள்ளவுள்ளோம். எம்முடைய நாட்டு மக்கள் பயன்பெறும் வகையில் இந்த பிரதேசத்தை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ)

# மின்னேரியாவில் நேற்று பஸ்கள் மோதி விபத்து!

*16 பேர் வைத்தியசாலையில்*

கொழும்பு, ஜன. 30

ஹபரணை - மின்னேரியாவில் நேற்று பஸ் விபத்து ஒன்று ஏற்பட்டது.

மின்னேரியா கோயிலுக்கு அருகிலுள்ள இரட்டை வளைவில் சுற்றுலா சென்ற பஸ்ஸுடன் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் 16 பேர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

# குடிவரவு கட்டுப்பாட்டாளரின் பிணை மனு ஒத்திவைப்பு!

கொழும்பு, ஜன. 30

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இல்லுக்பிட்டிய சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பிணை விண்ணப்பத்தை உயர் நீதிமன்றம் காலவரையறையின்றி ஒத்திவைத்துள்ளது.

நீதிபதி பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழாம் இலுக்பிட்டியின் சட்டப் பிரதிநிதிகளால் முன்வைக்கப்பட்ட பிணை மனு தொடர்பான உண்மைகளை பரிசீலித்ததன் பின்னர் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதேநேரம், அவர் மீதான நீதிமன்ற அவமதிப்பு வழக்கு மே 8 ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இலுக்பிட்டிய, தனது சட்டத்தரணிகள் ஊடாக பிணை விண்ணப்பத்தை சமர்ப்பித்திருந்தார்.

கடந்த அரசாங்கத்தின்போது அறிமுகப்படுத்தப்பட்ட இலத்திரனியல் விஸா வழங்கும் முறைமைக்கு எதிரான அடிப்படை உரிமைகள் மனுக்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவை நடைமுறைப்படுத்தத் தவறியமைக்காக குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் நீதிமன்றத்தை அவமதித்ததாக குற்றம்சாட்டப்பட்டுள்ளார். (அ)

# இலங்கையின் சுற்றுலாத்துறையில் இணைய விரும்புகிறது நியூசிலாந்து!

## யாழ்.பல்கலையில் வைத்து தூதுவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 30

**அதிகளவான நியூசிலாந்து சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நாடுகளில் ஒன்றாக விளங்கும் இலங்கையில், சுற்றுலாத்துறை மற்றும் கைத்தொழில், விவசாய உற்பத்தித் துறைகளில் இணைந்து செயல்படுவதற்கு நியூசிலாந்து ஆர்வமாக இருப்பதாக இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர் டேவிற் பைன் குறிப்பிட்டார்.**



வடக்குக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இலங்கை, மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான நியூசிலாந்தின் தூதுவர் டேவிற் பைன் தலைமையிலான குழு நேற்று புதன்கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டு, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையிலான குழுவினரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பின் போது, இலங்கை, மாலைதீவு மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான நியூசிலாந்தின் தூதுவர் டேவிற் பைன், சட்டவிரோத புலம்பெயர்வுக் கட்டுப்பாட்டுக்கான தொடர்பு அதிகாரி ப்ரெட் சீஃல்ட்ட் மற்றும் தூதரகத்தின் கொள்கை ஆலோசகர் சுமுது ஜயசிங்ஹ ஆகியோரும், பல்கலைக்கழகத்தின் சார்பில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் என். கெங்காதரன், பொருளியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் முத்துகிருஸ்ணா சர்வானந்தன் மற்றும் சுற்றுலா, விருந்தோம்பல் கற்கைத் துறையின் நிகழ்சித்திட்டத் தலைவர் பேராசிரியர் சிவானந்தமூர்த்தி சிவேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நியூசிலாந்துக்கும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கும் இடையில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், விவசாயம் மற்றும் கடற்றொழில், விளையாட்டு மருத்துவம் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படக்கூடிய கூட்டுச் செயற்றிட்டங்கள் பற்றி இந்தக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நியூசிலாந்து அரசாங்கத்தின் அனுசரணையுடன் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான இணைப்பு நிலையம் ஒன்றை அமைப்பது தொடர்பில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில் முன்மொழிவொன்றைக் கோரிய இலங்கைக்கான நியூசிலாந்து தூதுவர், இது தொடர்பில் இணைந்து பணியாற்றுவதற்கான தமது விருப்பத்தையும் வெளிப்படுத்தினார். (அ)

# இந்திய மீனவர்கள் மீது சூடு எதிர்பாராதவிதமான சம்பவம்!

கொழும்பு, ஜன. 30

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களும் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு இந்திய மீனவர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானமை, எதிர்பாராத விதமாக துப்பாக்கி இயங்கியதால் இடம்பெற்ற ஒரு சம்பவமாகும்.

இந்த சம்பவம் தொடர்பான முதற்கட்ட விசாரணையைத் அடுத்து இந்த விடயம் தெரியவந்ததது. இதற்கிடையில், கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 13 இந்திய மீனவர்களும் மல்லாகம் நீதவானிடம் ஆஜர் படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் குழுவொன்று சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில், கடற்படை குழுவினர் கடந்த 27 ஆம் திகதி இரவு அவர்களை கைது செய்தனர்.

முதலில் நாம் கரையில் இருந்து இந்திய மீனவர்களுக்கு சமிஞ்சை விளக்குகள் மூலம் அறிவுறுத்தல்கள் மற்றும் எச்சரிக்கை வழங்கினோம்.

ஆனால் அவர்கள் அதனை கண்டுக் கொள்ளாமல் இருந்தனர். அப்போது நாம் இரண்டு எமது அதிகாரிகளை அருகில் அனுப்பி இது குறித்து சோதனை செய்தோம்.

அப்போதே இந்த துரதிஷ்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது - என்றார். (அ)

# தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை வழங்காத நிறுவனங்கள் தொடர்பில் அவதானம்!

## ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

கொழும்பு, ஜன. 30

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக 1700 ரூபாவை வழங்க முடியாத நிறுவனங்கள் தொடர்பில் ஆராயப்படுமென ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை வணிக சபையின் ஏற்பாட்டில் கொழுப்பில் இடம்பெற்ற பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த ஆண்டு 4 வீதத்தை விடவும் அதிக பொருளாதார வளர்ச்சியை அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளமை பாரிய சவாலாக உள்ள போதிலும் அதனை ஈடுசெய்ய டியும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

இதன்போது பல துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

குறிப்பாக எதிர்வரும் பாதீட்டில் முதலீட்டு செலவீனமாக 1.35 ட்ரில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

கடந்த காலங்களில் இவ்வாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் 75 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான தொகையே பயன்படுத்தப்பட்டன.

எனினும் இந்த முறை அந்த தொகையை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான பொறிமுறை உருவாக்கப்படும்.

முதலீடு தொடர்பில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அதன் செயலாளர் மற்றும் அதிகாரிகளுடன் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்படி, இலங்கையில் முதலீடு செய்வதற்கு 82 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும் என்பது குறித்த சந்திப்பில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, நாம் இந்தியா மற்றும் சீனாவுடனான பிரதான வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுத்துள்ளோம்.

எனவே, குறிப்பிடத்தக்க முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டு வர முடியும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அதேபோன்று இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாயில், 90 சதவீதமானவற்றை சில நிறுவனங்களே பெற்றுத் தருகின்றன.

அத்துடன், தேசிய பொருளாதாரத்தில் மேல்மாகாணம் 37 சதவீத பங்களிப்பை வழங்குகின்ற அதேவேளை, ஊவா மாகாணம் 5 சதவீத பங்களிப்பையே வழங்குகின்றது.

இதேவேளை, பெருந்தோட்ட தொழிலாளர் தொடர்பிலும் அவதானம் செலுத்த வேண்டும்.

1991 ஆம் ஆண்டு நிறுவனங்களுக்குத் தோட்டங்கள் வழங்கப்பட்டன.

32 வருடங்கள் கழிந்துள்ள போதிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த வேதனமாக 1700 ரூபாவை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, குறித்த நிறுவனங்கள் பொருத்தமானதா? இல்லையா? என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்படும் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 30.01.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org